யாழ்ப்பாணம்

விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 31 ஸபர் 12 இதழ் 249

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-10-1986

இலங்கை இனப்பிரச்னை:

## அரசின் யோசனைகள் குறித்து மேலும் விளக்கங்கள் தேவை

— ராஜீவ்

கன்பரா, அக். 16

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக அந்நாட்டு அரசாங்கத்தினுல் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்து சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன வெனக் கூறிய இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இவ்விளக்கங்களை அடுத்தமாதம் பங்களூரில் சார்க் மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை அதிபர் வரும்போது அவரிடம் தாம் கோரவிருப்பதாகக் கூறினர்.

திரு காந்தி தமது ஆஸ்திரேலிய விஜயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் கன்பரா நகரில் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் கலந்துகொண்டார் அம்மகாநாட்டில் இந்தியா எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக திரு.

(9-ம் பக்கம் பார்க்க)

# 'பிரபா'வை தீர்த்துக்கட்டும்

## இராணுவ ரகசிய திட்டம் அம்பலம்

## 'கிட்டு'வை ஒழிக்க ஒரு லட்சம்

### புலிகளால் கைதான இளைஞர் தகவல்

(எமது அலுவலக நிருபர்)

**இந்தியாவுக்கு விசேஷ விமானத்தில் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒழித்துக் கட்டுவதற்கு, இராணுவம் இரகசியமாகத் தீட்டிய திட்டமொன்று அம்பலமாகியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விலைமதிக்க முடியாத சன்மானத்தை வழங்கவும் அவர்கள் முன்வந்துள்ளனர்.**

மேலும் விடுதலைப் புலிகளின் யாழ் குடாநாட்டுத் தளபதி 'கிட்டுவை' ஒழித்துக் கட்டுவதற்கும், இதற்குச் சன்மானமாக ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கும் அவர்கள் திட்டம் தயாரித்திருந்தனர்.

இத்தகவல்களை இராணுவத்தினருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த அரியாலையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் செல்வபாலன் (19 வயது) நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களைத்தொடர்ந்து இவர் புலிகளின் துப்பறியும் பிரிவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் பேட்டியளித்தார்

தளபதி கிட்டுவையும், புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர்களையும் ஒழித்துக்கட்ட பலாலி இராணுவத்தினரால் வழங்கப்பட்ட 'கிரேனேட்' ஒன்றையும் பேட்டியின்போது பத்திரிகையாளர்களுக்கு அவர் காண்பித்தார்

யாழ் நகரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் இம்மகாநாடு நேற்று நண்பகல் நடைபெற்றது.

இந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் தளபதி கிட்டு உட்பட பல முக்கியஸ்தர்களும் சமூகமளித்திருந்தனர்

கைகளில் விலங்கு மாட்டப்பட்ட நிலையில் செல்வபாலன், தாமாகவே பல திடுக்கிடும் தகவல்களைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்

(10ம் பக்கம் பார்க்க)



மன்னார்—சின்னபன்றிவிரிச்சானில்

## புலிகள் - ராணுவம் பலத்த மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

தள்ளாடி இராணுவமுகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டதாகவும், விடுதலைப்புலிகள் தரப்

[10ம் பக்கம் பார்க்க]

## காலநடை வளம்:

## ஆய்வு நிறுவனம் நடத்தும் இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வெள்ளி

'எமது பிரதேசங்களின் காலநடை வளங்களும் அவற்றின் விருத்தியும்' என்றதலைப்பில் ஆய்வு நிறுவனம் நடாத்தும் இருநாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகிறது.

காலநடை வளங்களும் அவற்றின் தேவைகளும் எனும் பொருள்பற்றிய நாளைய கருத்

[9ம் பக்கம் பார்க்க]

## முக மூடிகளைக் கிழித்தெறியுங்கள் பிரசுரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று நடைபெறவிருக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டைக் கண்டிக்கும் வகையில் 'முகமூடிகளைக் கிழித்தெறியுங்கள்' என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

[9ம் பக்கம் பார்க்க]

## தளபதி விக்டரின் உடல் மன்னாரில் நல்லடக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் பிராந்தியப் பொறுப்பாளர் விக்டரின் பூதவுடல் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் மன்னாரில் நல்லடக்கம் செய்யப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகள் அரைவட்ட வடிவாக அணிவகுத்து நின்று இராணுவ மரியாதை செலுத்திய பின் விக்டரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது

பெருந்திரளான மக்கள் சூழ்ந்து நின்று விக்டரின் உடலுக்கு தமது அஞ்சலியை செலுத்தினர்கள். பலர் கண்ணீர்விட்டு அழுது தமது அஞ்சலியைச் செலுத்தினர்கள். (ஒ)

**18-10-86** சனிக்கிழமை முதல் மீண்டும்

எமது வாடிக்கையாளர்களின் வசதிக்காக திருமண வைபவங்கள், மற்றும் மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற மணிப்புரி, காஞ்சிபுரம், பெனுறிஸ், சிபோன் மணிப்புரி, சிபோன் காஞ்சிபுரம், காஷ்மீர் இன்னும் ஏராளமான பட்டுப் புடவைகள், பட்டு வேட்டி சால்வைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

உயர்ந்த ரகம்! விலையோ மலிவு!!

இன்றே நாடுங்கள்!!!

ஹப்பி ரெக்ஸ்ற்

HAPPY TEXT

149 } நவீன சந்தை, ரெலிபோன்:- 24197
168 } யாழ்ப்பாணம். 22056

[C-5187]

## யாழ்ப்பாணத்தில் சிவில்நிர்வாகம் இயங்க கோட்டை இராணுவ முகாமை உடன் அகற்றவும்

### ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இயங்கும் வகையில் ஷெல் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறும், கோட்டையிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறும் செயலக ஊழியர்களாகிய நாம் தங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வாறு நேற்று யாழ் செயலகத்தின் முன்பாக செயலகத்தின் சகல திணைக்களங்களையும் சேர்ந்த 500க்கு மேற்பட்ட ஊழியர்கள் வெளிநடப்புப் போராட்டத்தை நடாத்திய பின் இலங்கை ஜனாதிபதிக்கு யாழ் அரச அதிபர் மூலம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். செயலகத்தில் மாவட்ட உள்நாட்டு விவகாரங்கள் திணைக்களம் உட்பட இருபதுக்கு மேற்பட்ட திணைக்களங்களில் ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

(9ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மின்ஒட்டு மின்துளையிடும் யந்திரம் கை துரிந்தி தகடு - கம்பி வெட்டும் கருவிகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 257, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம் C 5209

நாவற்குழி - கேரதீவு றோட் றெயில் ஸ்டேசன் வீடமைப்புத் திட்டம் அருகாமையில் 32 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. துண்டு துண்டாகவும் பிரித்துக் கொடுக்கலாம். 2. உடுவில் கந்தரோடை றோட்டில் (டச்சு றோட்டருகாமையில்) 6 பரப்புக்காணி சகல வசதிகளுமுள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு. 3 பரந்தன் பூநகரி றோட்டில் இரணைமடுக் குளத்தால் 5-ம் வாய்க்கால் நீர்பாசன வசதியுள்ள 12 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் துரைரத்தினம், லோட்டன் றோட், வேலக்கைப் பிள்ளையார் கோயில் அருகாமை, மானிப்பாய் தெற்கு C-5192

மைசூர் அரிசி நம்பர் 1 கல்லில்லாதது சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5042]

வெளிநாடு செல்பவரின் சகல வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, அல்மாரி, கட்டில் மெத்தைகள், கண்ணாடிமேசைகள், Box றேடியோக்கள், சகறி றேடியோக்கள், மின்விசிறிகள் Pyrex, கிளாஸ் வகைகள் Floor Polishers Kerwood Mixture, சிங்கர், Zig zag தையல் மெஷின், Formica சாப்பாட்டு மேசை. Flasks, Toaster Blender வேலைப்பாடமைந்த தளபாடங்கள், மற்றும் பலவிற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். St. Charles பாடசாலையருகில். (C5237)

தமிழ் தட்டச்சு இயந்திரம் [Olympia Standard Typewriter, ஆங்கிலம் [Olympia Portable [New] மற்றும் Portable, Standard Electric Typewriter விற்பனைக்குண்டு. Fudo Enterprises Jaffna Road, Manipay [Bitsman - Sivha Studio அருகாமையில்.] [C 5243]

நல்லஇன அல்சேஷியன் 5 பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. [36 நாட்கள்] தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: E டானியல்பொனிப்பஸ், 16/1 மவுன்காமல்ரோட், யாழ்ப்பாணம். [C-5240]

1½ மாத பொமனேரின் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நிறம்: கறுப்பு, வெள்ளை. தொடர்பு கொள்ளவும். சேவ்ரிக்கும் வங்கிக்கும் இடையில், இல: 50, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C-5241)

நல்ல நிலையிலுள்ள E N. தொடர் இலக்க ஒஸ்ரின் கேம்பிறிச் கார்விற்பனைக்குஉண்டு. தொடர்பு அ. பொ. இராசையா, கோண்டாவில்கிழக்கு கோண்டாவில். [C-5250

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்கான தொழில் பயிற்சி - Telex and I. D. D. (Operators International (இருபாலரும்) Electricians- தகுதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும் ஆரம்பம்: 22 - 10 - 1986 Electros Thirunelvely Junction C-5221

## தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கோப்பி (B)பாருக்கு நன்கு அனுபவம் உள்ள கோப்பி மேக்கர் உடன் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும். றஞ்சனாஸ் புடவை மாளிகை நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 5226)

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்விற்பனையாளர் தேவை. தொடர்பு கொள்ளவும்: சிமாட்டி, 122, Power House Road, Jaffna (C 5203)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

— மரணமெய்தியவர்.

சிற்றம்பலம் மகள் சந்திரா தேவி,
பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு.
மனுதார்.

இல. தத்துவம்/ 3991.

எதிர்

1. சிற்றம்பலம் கைப்பெண் சின்னப்பிள்ளை
2. சிற்றம்பலம் மகன் சிதம்பரநாதன்,
3. சிற்றம்பலம் மகள் இந்திராதேவி,
4. சிற்றம்பலம் மகள் பத்மநிதி எல்லோரும், பெரியதோட்டம் கரவெட்டி.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவர்ன் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிவுபட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதியன்று காலை 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுனுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஐப்பசி 01ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு
மா. தியாகராசா
சட்டத்தரணி,
ஆனைக்கோட்டை.

(C 5229]

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி சேவாச்சிரமத்தின் ஆதரவில் நடைபெறும்.

இவ்விழாவில் சேவாச்சிரமத்தால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சுக்களைத் தொடர்ந்து ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா ''படிக்காத ஞானி'' என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திருவை மு. பஞ்சலிங்கம் பரிசில் வழங்குவார். (சி)

## யாருடையது?

பெரியநாவற்குளத்தைச் சேர்ந்த செல்வி திபாகு கார்மலா (டல்ஸி) என்பவரது பேர்ஸினையும், ஒரு தொகைப் பணத்தினையும் சுன்னாகம் மின்சாரசபை அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. க. தனபாலசிங்கம் என்பவர் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## வகுப்புகள்

9 மாதகால டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள் கேக் ஐசிங், சமையற்கலை, தையற்கலை. பூவேலை, கைவேலை கோலம், கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல். ஆங்கிலம். முதலுதவி வகுப்புக்கள் ஆரம்பம் 20 - 10 - 86 [திங்கள்] Ladie's Academy (Regd), Victoria Road, Jaffna. [C-5223]

88ம் ஆண்டிற்கான G.A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைபந்தியடி, யாழ்ப்பாணம். [A 1424[

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்,

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2000 ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன;

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- உம் ஏனைய வற்றிக்கு ரூபா 50/- உம் சங்கத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

24- 10- 1986 வெள்ளிக்கிழமை நண்பகல் 12- 00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.

16 -10- 1986.

(C 1469)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வடமராட்சியில் தளபதி விக்டருக்கு இறுதி அஞ்சலி!

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறை நெல்லியடி புலோலிப் பகுதி மக்கள் நேற்று மன்னாரில் வீரமரணமெய்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மன்னார் தளபதி விக்ரர். ரூேம் ஆகியோருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பருத்தித்துறை கிராமக்கோட்டடியில் பெருந்திரளாகக் கூடியிருந்தனர்.

வடமராட்சிப் பகுதியெங்கும் சோகமயமாகவே காட்சியளித்தது மக்கள் யாவரும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர். கிராமக் கோட்டுச் சந்தியில் பூதவுடல்களை மக்கள் அஞ்சலிக்காக வைப்பதற்காக மேடையொன்று அமைக்கப்பட்டிருந்தது வீதிகள் எங்கும் வாழை

(9ம் பக்கம் பார்க்க)


## வெளிவந்துவிட்டது!

**G.C.E. A/L மாணவர்களுக்குரியது**

"இலங்கைப் பொருளாதாரம்"
"அரசநிதி"

ஆசிரியர்:- மா. சின்னத்தம்பி (B. A B. Phill)

விலை: ரூபா 15/-

★ வரவு செலவுத்திட்டம் ★ பொதுப்படுகடன்
★ அரசாங்க செலவு ★ வரிகள்
★ பற்றுக்குறையும் நிதியீட்டமும்

ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

வெளியீடு:-
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C5246]

## G. C. E. A/L 87/88
## நாடகமும் அரங்கியலும்

பரீட்சைப் பாட விதானத்திற்கமைய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வகுப்புக்கள் விடுமுறை நாட்களில் நடாத்தப்படும்

வட-இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்படும் நாடகவியல் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கும் [ஆசிரியர் தராதரம் வரை]

விரிவுரைகள் நிகழ்த்தப்படும்

ஆரம்பம்: 28-10-86 மாலை 4-00 மணி

தொடர்புகளுக்கு:

**அமைப்பாளர்,**
மக்கள் கலை அரங்கம்,
இணுவில், சுன்னாகம்.
[5 2 4 7]

## யாழ். நகரில் நாளைய தினம் மங்களகரமான ஆரம்பம்!



புதிய நிர்வாகத்தில்
முற்றிலும்
மறுசீரமைக்கப்பட்ட
கென்வூட்
கோப்பி
&
கூல்பார்

அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள்,
அனைவரையும் அன்புடன்
அழைக்கிறார்கள்
'கென்வூட்'
ஸ்தானத்தார்.



**கென்வூட்**
**கோப்பி & கூல்பார்**

24, நவீனசந்தை, யாழ்ப்பாணம். [C5149]

## புதிதாகச் சேர்ந்து கொண்ட

# இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மீது குண்டுவீச்சு; 60 பேர் காயம்!

ரெல் அவிவ், அக் 16

**இஸ்ரேலிய இராணுவத்தில் புதிதாகச் சேர்ந்துகொண்ட 300 காலாட் படையினர் மீது மூன்று கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதில் 60 பேர் பலத்த காயமடைந்தனர். இப்புதிய வீரர்களில் ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் கொல்லப்பட்டார்'**

இச்சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது. தமது பயிற்சியை முடித்துக்கொண்ட 300 புதிய இஸ்ரேலிய காலாட் படை வீரர்கள். சத்தியப் பிரமாணம் செய்யும் வைபவம் ஒன்றில் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தின் பின்னர் அவ் வீரர்கள் தமது உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து அளவளாவிக்கொண்டு நின்ற வேளையிலேயே மூன்று கைக்குண்டுகள் அவர்கள் மீது வீசப்பட்டன.

இச்சத்தியப் பிரமாண வைபவம் இடம்பெற்ற பகுதி இஸ்ரேலிய கட்டுப்பாட்டிலுள்ள பாலஸ்தீன குடியிருப்பு ஒன்றுக்கு அருகிலுள்ள ஒரு புனிதப் பிரதேசம் என்று தெரிவிக்கப்பட்டது.

காரொன்றில் வந்த இரு நபர்களே இக்குண்டு வீச்சில் ஈடுபட்டபின்னர் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கியிருந்தனர்.

இத்துடன் அந்த பாலஸ்தீன குடியிருப்புப் பகுதியிலும் ஊரடங்குச் சட்டத்தைக் கொண்டு வந்து தேடுதல்களை அவர்கள் நடத்தினர்.

இதேவேளை இக்குண்டு வீச்சுக்களுக்கு தாமே பொறுப்பென்று பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் உரிமைகோரியுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகவே இக்குண்டுவீச்சு நடத்தப்பட்டதாக பி. எல். ஓ. தெரிவித்தது.

## சிரமதான முறையில் கிணறு

புங்குடுதீவு, வியா

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயவளவில் சிரமதான முறையில் ஆலய பரிபாலனசபையினரும் பொதுமக்களும் சேர்ந்துபுதிய கிணறு ஒன்றை வெட்டியுள்ளார்கள் அக்கிணறு கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 23 ஈரானிய

# போக்குவரத்து விமானங்கள் மீது குண்டுவீச்சு!

### ஈராக் அறிவிப்பு!

பக்தாத், அக் 16

ஈரானின் 23 இராணுவ போக்குவரத்து விமானங்களை குண்டுவீசி நாசமாக்கியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது

ஸி 130 ரகத்தைச் சேர்ந்த அமெரிக்க தயாரிப்பு போக்குவரத்து விமானங்கள் இவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஈரானின் விமானநிலையமொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதே இந்த விமானங்கள் குண்டுவீச்சுக்குள்ளானதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

அத்துடன் இவைமீது குண்டுவீசிய தனது விமானங்கள் பாதுகாப்பாகத் திரும்பிவிட்டன எனவும் ஈராக் மேலும் அறிவித்துள்ளது

இதேவேளை ஈரான் இதனை மறுத்துள்ளது 'போயிங் 737' ரக பயணிகள் விமானமொன்றையே ஈராக் தாக்கியுள்ளதாக அது மேலும் தெரிவித்தது இத்தாக்குதலில் மூன்று பயணிகள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஈரான் மேலும் தெரிவித்தது.

## பங்களாதேஷ்

# ஜனாதிபதி தேர்தல்: எர்ஷாத் முன்னணியில்

டாக்கா, அக் 16

பங்களாதேஷ் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பு முடிவடைந்துள்ளது. இதுவரை வெளியான முடிவுகளின் அடிப்படையில் பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் எர்ஷாத் பெரும்பான்மை பலத்துடன் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தமக்கு அடுத்தபடியாக உள்ள வேட்பாளரைவிட 20 மடங்கு அதிகப்படியான வாக்குகள் ஜெனரல் எர்ஷாத்துக்கு இதுவரை கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பங்களாதேஷின் முக்கிய எதிர்க்கட்சிப் பிரமுகர்களான பேகம் ஷேக் ஹஸினா வாஜெட், பேகம் ஹலிதா ஸியா ஆகியோர் இந்த ஜனாதிபதி தேர்தலில் பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்கம் அறிவிப்பது போல வாக்களிப்பு நேர்மையாக இடம்பெறவில்லை எனவும் பல வாக்குப் பெட்டிகளில் ஏற்கனவே அதிபர் எர்ஷாத்தின் சின்னம் போடப்பட்ட வாக்குச் சீட்டுகள் போடப்பட்டிருந்தன வென்றும் இரண்டாவது தடவையாகவும் வாக்களிக்கும்படி பலர் கேட்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பங்களாதேஷில் வாக்களிப்பு இடம்பெற்ற போதிலும் டாக்கா, சிட்டாகொங் நகரங்களில் பெரும் கலவரங்கள் மூண்டிருந்தன.

உலகச் செய்திகள்

## குஜராத்தில்

# பட்டாஸ் வெடிவிபத்து 5 பேர் பலி!

புதுடில்லி. அக் 16

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகருக்கண்மையிலுள்ள கிலாட் என்ற கிராமத்தில் இடம்பெற்ற பட்டாஸ் வெடிவிபத்தொன்றில் 5 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. கிலாட் கிராமத்திலுள்ள பட்டாஸ் வெடித் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீயையடுத்தே இவ் விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது

இப்பட்டாஸ் தீவிபத்தையடுத்து அத் தொழிற்சாலை முற்றிலும் தீக்கிரையாகி நாசமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## எரியூட்டும் குண்டிலிருந்து பாதுகாப்பு——

# பாதுகாப்பு முன்ஏற்பாடுகள்

1 அனைத்துக் கட்டிடங்களினதும் கூரைகளிலிருக்கும் பழைய துணிகள், காகிதங்கள், குப்பை கூளங்கள் முதலியன முற்றாக அகற்றப்படுதல்வேண்டும். பெரிய மரங்களுக்கு அருகிலிருக்கும் கட்டிடங்களாயின் காய்ந்த இலைகள், சிறு கொப்புகள் முதலியன கூரைமேல் தேங்குவதற்கு வாய்ப்புண்டு. இவற்றினை வாரம் ஒரு முறையாவது முற்றாக அகற்றிச் சுத்தம் செய்யவேண்டும்.

2 கட்டிடத்தின் அனைத்து அறைகளும், முற்றங்களும், விறாந்தைகளும் எந்நேரமும் நன்கு துப்பரவாக இருக்கவேண்டும் அன்றைய தேவைக்குரியவற்றைத் தவிர வேறெந்த எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களும் வெளியே இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். குப்பை, கூளங்கள் அனைத்தும் கட்டிடங்களிலிருந்து தொலைவிலுள்ள உங்கள் வரையறைக்குட்பட்ட பிரதேசங்களினுள் சிறு கிடங்குகளில் இடப்பட்டுத் தினமும் எரிக்கப்படவேண்டும்.

3. எளிதில் தீப்பற்றக்கூடியவாறுள்ள எந்தவொரு அறையிலும் அத்தியாவசியமான பொருட்கள் இருப்பது தவிர்க்கப்படவேண்டும் இவை முக்கியமாக தொழிற்சாலைகள், கடைகள் முதலியவற்றின் சரக்கு சேமிப்பு அறைகளில் கடைப்பிடிக்கப் படவேண்டியனவாகும்.

4 கட்டிடங்களின் அதி உயரமான பகுதிக்கு வெளிப்புறத்தால் செல்லக்கூடியவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

5 கதவு, ஜன்னல்களுக்குத் தொங்கவிடப்பட்டுள்ளதிரைச் சீலைகளை, எளிதில் தீப்பற்றுவதைத் தடைசெய்யக்கூடிய கரைசல்களினுள் தோய்த்து உலர்ந்த பின்னர் தொங்கவிடவும் இதற்காக ஒரு கலன் நீருக்கு 9 அவுன்ஸ் போராக்ஸ் (BORAX) 4 அவுன்ஸ் போரிக் அமிலம் (BORIC ACID) இட்டு பெறப்பட்ட கரைசலையே உபயோகிக்கவும்.

6. கட்டிடத்தின் உத்தரங்கள், குறுக்குச் சட்டங்கள் போன்றவற்றிற்கும் தீப்பற்ற முடியாத கலவைப் பூசுக. இதற்காக சுட்ட சுண்ணும்பு 21 றுத்தலும் ஒரு அவுன்ஸ் கறியுப்பும் நீரும்கலந்து பெறப்பட்ட கலவையை மூன்று பூச்சுக்களாக இடவும்.

7. தீயணைப்பில் ஈடுபடுவதற்காகவும், உள்ளே சிக்குண்டவர்களை மீட்பதற்காகவும் உங்கள் பகுதிகளில் சிறு குழுக்களாக அவற்றைப் பயிலவேண்டும். அவர்கள் எந்நேரமும் தயார் நிலையில் இருக்கவேண்டும்.

8. மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருட்களை எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களிலிருந்து தொலைவில் வெகு பாதுகாப்பாக வைக்கவேண்டும். அவை சேமிக்கப்பட்டிருக்கும் இடமானது சுற்றுடலுடன் ஒப்பிடுகையில் சற்றுப் பள்ளமாக இருத்தல் விரும்பத்தக்கது.

9. நீர், மணல் போன்றவை உடனடியாகக் கிடைக்காத இடங்களில் அவற்றைச் சேகரித்து வைக்கவேண்டும் சேமிக்கப்பட்டிருக்கும் இடமானது எளிதில் அணுகக் கூடியதாகவும் இருத்தல் அவசியமானதாகும்.

10. எரிகாயங்களுக்குரிய முதலுதவிச் சிகிச்சைக்குத் தேவையான மருந்து வகைகள், கட்டுத் துணிகள் போன்றவை எந்நேரமும் தயார்நிலையில் இருத்தல் முக்கியமானதாகும்

இதுவரை எரியூட்டும் குண்டுகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிந்த நீங்கள் தாக்குதல் நிகழும்வரை காத்திராது முன்கூட்டியே தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள். மேலதிக விபரங்களோ, விளக்கமோ தேவைப்படும்பட்சத்தில், உங்கள் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர் ஒருவருடன் தொடர்புகொள்ளுங்கள். அவர் உங்களுக்கு உதவுவதோடு, இதிற்கண்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் ஒத்தாசை புரிவார்.

[9ம் பக்கம் பார்க்க]


யாழ்.மக்களுக்கோர் மகிழ்ச்சிகரமான செய்தி!
சுவைப்பிரியர்களுக்கோர் சுவையான செய்தி!!

பலவகையான

**'KEELS' [கீல்ஸ்] உணவுப்பொருட்கள்**

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்!!!

| CHICKEN | | | | MISCELLANEOUS | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Breast | 100g | - | 11 00 | Frankfurters | 400g | - | 37 90 |
| Thighs | 100g | - | 10 00 | Hamberger | 200g | - | 18 50 |
| Meat Balls | 200g | - | 18 50 | Hot Dogs | 400g | - | 29 00 |
| Sausages | 300g | - | 30.00 | Lunchen Meat Slices | 200g | - | 16 00 |
| | | | | Cooked Salami | 200g | - | 21.00 |

| BEEF | | | | PORK | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Meat Balls | 200g | - | 12 50 | Back Bacon | 200g | - | 25 50 |
| Sausages | 400g | - | 27 00 | Strekary Bacon | 200g | - | 22 50 |
| Corned Beef | 200g | - | 21.00 | Sausages | 400g | - | 31 00 |
| | | | | Pawkies | 300g | - | 26.00 |

**'Cristombu Farm' Broilers 1 Kg.– 62 50**

★ குறிப்பு: எக்காரணம் கொண்டும், போக்குவரத்துச் செலவுக்கென, மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாதென்பதை அறியத் தருகின்றோம்.

அங்கீகரிக்கப்பட்ட வடமாகாண விநியோகஸ்தர்:

**The Medical Hall மெடிக்கல் ஹோல்**

No 224, HOSPITAL ROAD,
JAFFNA.
Phone: 22575

இல. 224. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 22575 (A2804)

### மணிவாக்கு

ஒருவனுக்கு ஒருகுறிப்பிட்ட நிலப்பரப்பு) மலைகள், ஆறுகள், காடுகள முதலியவற்றை கொண்டது தான் ஒருநாடு என்பதில்லை. அதுஒரு கோட்பாடு. அந்தக் கோட்பாட்டுக்கு விசுவாசமாய் இருப்பதேதேசப்பற்று.

ஜோர்ஜ்வில்லியம்கேர்ட்டின்.

## நமதுநோக்கு

# இங்கு வேண்டாம் இந்த ராணுவ முகாம்!

ஓர் ஊரில் ஒரு ராணுவம் முகாமிட்டிருக்கிறதென்றால், அவ்வூர் மக்கள் அச்சமின்றி வாழவும், அன்றாடக் கடமைகளைத் தடங்கலின்றிச் செய்து கொள்ளவும் வழிசெய்யப் பட்டுள்ளது என்பது அர்த்தம்.

எங்கள் ஊரில், அதாவது யாழ்ப்பாண நகரில் பழைய டச்சுக் கோட்டைக்குள் ஒரு ராணுவம் முகாமிட்டுள்ளது. இந்த ராணுவம் தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ள முடியாமற் திணறுவது ஒருபுறமிருக்க, பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய பொதுமக்களே அந்த ராணுவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள் என்றால் அதன் நடவடிக்கைகள் இப்பகுதி மக்கள் நலன்களுக்கு உகந்ததாய் இல்லை என்றுதான் அர்த்தமாகும்.

இந்தப் பிரதேசத்தை அரசாங்கம் தனது ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் காட்டுவதற்காக ஆங்காங்கே ராணுவ முகாம்களை அமைத்துள்ளது. இந்த முகாம்களிலிருந்து வெளிவரும் சிப்பாய்களுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கு மிடையில் மோதல்கள் நிகழ்கின்றன. போராளிகளின் கெரில்லாத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் ராணுவம் முகாமுக்குத் திரும்புகின்றது. அதன் பின் அங்கிருந்து ஷெல் குண்டுகள், பீரங்கிக் குண்டுகளைக் கண்மூடித்தனமாக ஏவுகின்றது. அப்பாவிப் பொதுமக்கள் பலியாகின்றார்கள்.

ஏவப்படும் குண்டுகள் எங்கே விழுகின்றன என்பதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. அது சனசந்தடிமிக்க பஸ் நிலையத்திலும் விழுகின்றது. உணவுச் சாலைகள் மீதும் விழுகின்றது. ஆஸ்பத்திரி மீதும் விழுகின்றது. கல்லூரிகள் மீதும் விழுகின்றது.

அண்மையில் யாழ். செயலகத்தின் அருகிலும் ஒரு குண்டு விழுந்து சேதமுண்டாக்கியுள்ளது.

இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள்?

தமிழ் மக்கள்தான்!

இதே நிலை கொழும்பிலோ அலலது கண்டியில் இருக்குமானால் அரசாங்கம் என்ன செய்யும்?

சிங்கள மக்களுக்கு ஒருவித நீதி; தமிழ மக்களுககு ஒருவித நீதி! இதற்குப் பெயர்தான் இனவாதம்!

ராணுவம் இப்பிரதேசத்தில் இருக்கத்தான் வேண்டும் என்றால் அதற்கு வேறு இடம் இல்லையா?

இப்பிரதேசத்தின் பிரதான நகரின் ஒரு பிரதான பகுதியில் இருந்துகொண்டு, ஆயிரம் மீட்டர் வலயம் என்று ஒன்றைப் பிரகடனப் படுத்தி, அந்த ஆயிரம் மீட்டருக்குள் எவரும் இருக்கக் கூடாது என்று எதிர்பார்ப்பது எவ்வளவு பேதமை?

மாநகரசபை வெளியேறிவிட்டது. பொது நூலகம் இப்பகுதியிலே காலாகாலமாக இருந்துவரும் பொது ஸ்தாபனங்கள், கல்லூரிகள், தொழிற் கூடங்கள், பெரியாஸ்பத்திரி முதலானவற்றை என்னசெய்வது? இயங்குவதில்லை. பெரிய தபாலகம் நித்தியகண்டம் என்ற நிலையில்.

பெரியாஸ்பத்திரியில் ஊழியர்களும், அதிகாரிகளும் அவசரசேவைகளைப் படிப்படியாகக் குறைப்பது பற்றி முடிவுசெய்துள்ளார்கள். செயலகத்தை நோக்கி ஷெல் வீசப்பட்டதைக் கண்டித்து நேற்று திணைக்கள ஊழியர்கள் வெளிநடப்பு நடவடிக்கையொன்றை நடத்தினர்.

நிலைமை இவ்வாறே நீடிக்குமானால், யாழ்ப்பாண நகரமே வேறு பாதுகாப்பான இடத்துக்கு மெதுவாக மாற்றப்பட்டுவிடும் போல் தெரிகின்றது.

அதைத்தான் இந்த அரசாங்கம் விரும்புகின்றதா? அதற்காகத்தான் அன்றாடம் மக்கள் எழுப்பும் அவலக்குரல்களுக்கு செவிமடுக்காமல் இருக்கின்றதா?

அவ்வாறு யாழ்ப்பாண நகரம் அகற்றப்படுவிடுமானால் அங்கேயும் இந்த ராணுவம் முகாமிடவருமா? வருவதும் சாத்தியமாகுமா?

இந்தநகரம் இப்பிரதேசத்தின் தலைநகரம், இங்கே தான் சகலவிதமானதேவைகளுக்குமென பிரதேசத்தின் நாலாபக்கமுமிருந்து மக்கள் கூடுகிறார்கள் அதனால் நகரின முக்கிய அம்சங்கள் அனைத்தும் இங்கேயே தான் இருக்கவேண்டும். எனவே ராணுவம் இங்கு தேவையில்லை அதனால் மக்களுக்கு தீமையன்றி நன்மையில்லை.

ஆகவே வீண் விதண்டாவாதங்களையும் வரட்டுக் கௌரவங்களையும் பார்த்துக்கொண்டிராமல் அப்புறப்படுத்துங்கள், அரசு செய்யக்கூடிய அவசர காரியம் இது!

### புங்குடுதீவு பொதுநூலக புத்தகங்கள்

புங்குடுதீவு வியா.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலக கட்டடத்தில் இயங்கிவரும் புங்குடுதீவு பொது நூலகத்திற்கென்று பதினையாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் தற்போது இங்குவந்து பல மாதங்களாகிவிட்டன அப்புத்தகங்கள் இன்னமும் வாசகர்களுக்கு வழங்கப்படாமலிருப்பதாக தெரியவருகிறது.

மேலும் ஒருகிழமைக்கு இரு புத்தகங்கள் வீதம் வழங்கப்பட்டுவந்தது தற்போது ஒரு புத்தகம் மட்டும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# "தமிழ் மக்கள் இன்னல்களையிட்டு அனைவரும் வருந்தும் நிலையிலுள்ளோம்"

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்புவிழாவில் அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இலங்கையில் தமிழ்மக்கள் படும் இன்னல்களையிட்டு அனைவரும் வருத்தப்பட வேண்டிய நிலையிலுள்ளோம். எமது கோரிக்கைகள், இவற்றைப் புரிந்துகொள்ளமுடியாதோர் காதில் விழுந்துள்ளது என்பது உண்மைதான். ஆயினும் ஒடுக்கப்படுவோரை இறைவன் நோக்கிக் கொண்டிருக்கிறான். எமது இன்னல்கள் உண்மையாகவும் நியாயமானவையாகவும் இருந்தால் இறைவன் எம்முடனேயே இருக்க வேண்டும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு கதிர்காமர் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் கல்லூரி வளர்ச்சிபற்றி அதன் உப- ஸ்தாபனங்கள் பற்றி எடுத்துரைத்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

'லண்டன் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்படும் க. பொ. த. [சா. த]. உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு உதவுமுகமாக நடத்தப்படும் ஆங்கில வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்திவருகிறோம். க. பொ. த. எயர்தர [இலங்கை]ப்பரீசைக்குத் தோற்றிய 50 மாணவர்களுள் 15 பேர் பல்கலைக் கழக அனுமதித் தகுதி பெற்றனர். 6 பேருக்கு அனுமதி கிடைத்தது. கடந்த வருட சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய 135 பேரில் 85 பேர் உயர்தர வகுப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதிபெற்றனர்.

"கம்பியூட்டர் ஆய்வுகூடம் ஒன்று எமது பாடசாலையில் நிறுவப்பட்டுள்ளது. உயர்தர மாணவரின் நேர சூசிகையில் கம்பியூட்டர்பாட வகுப்புகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுளளது. அத்துடன் ஏனைய மாணவருக்கும் கல்லூரியை விட்டு வெளியேறிய மாணவருக்கும் கம்பியூட்டர் பாடநெறிகள் உள்ளன.

"யாழ்ப்பாணத்தில் நிலவிய பதற்ற நிலையினால் பல கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவில்லை. ஆரம்பப் பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர்ப் போட்டியில் ஆபிரகாம் இல்லம் முதலிடம் பெற்றது. சிரேஷ்ட பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டியில் ஹாஸ்டிங்ஸ் இல்லம் முதலிடம் பெற்றது. கல்லூரியின் ஹாக்கி குழு தனது வழமையான போட்டிகளை நடத்த முடியவில்லை.

உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரையில் கல்லூரியின் முதற் குழு இவ்வருடம் பல நல்ல சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தது. கல்லூரியின் வலைப் பந்தாட்டக் குழு நடைபெற்ற சகல சுற்றுப் போட்டிகளிலும் கலந்துகொண்டது. பூப்பந்தாட்டக் குழு யாழ் பல்கலைக்கழகக் குழுவுடனும், தொழில் நுட்பக் கல்லூரிக் குழுவுடனும் போட்டியிட்டது முதற் குழுவுடன் நடைபெற்ற போட்டிகளில் ஒன்றில் மட்டுமே வெற்றிபெற்றது. பின்னைய குழுவுடனான ஆட்டங்களில் மூன்றில் வெற்றிபெற்றது. கூடைப்பந்தாட்ட முதல் இரு போட்டிகளிலும் 17 வயதுக்குட்பட்டோர் குழு ஒரு போட்டியிலும் பங்குபற்றியது. டெனிஸ், டேபிள்-டெனிஸ் ஆகிய விளையாட்டுக்களிலும் மாணவர்கள் கூடியளவு உற்சாகம் காட்டி வருகின்றனர்.

"கல்லூரியில் சமய நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றன.

"கல்லூரியின் இலக்கிய சங்கங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. எமது கல்லூரி மாணவரின் ஏடான 'யங் ஐடியா' தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

"எமக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி கல்வியின் நோக்கத்தை அடைய நாம் முயலவேண்டும். யாழ்ப்பாணக் கல்லூரி தனது கல்வி நிலையங்கள், தொழிநுட்ப, விவசாய நிலையங்கள் மற்றும் நூல் நிலையங்களுடன் இப்பணியையே நிறைவேற்ற முயல்கிறது." [அராலி நிரு.]

[ஊ]

# விக்டரின் பூதவுடலுக்கு சாவகச்சேரியில் 5000 மக்கள் அஞ்சலி!

கிளிநொச்சி, வியா

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட பிரதம தளபதி விக்டரின் பூதவுடல் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிநகர சந்தை மைதானத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக கொண்டுவரப்பட்டபோது ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கண்ணீர் மல்க கவலைதோய்ந்த முகத்துடன் அஞ்சலி செலுத்தினார்கள்.

தளபதி விக்டரின் பூதவுடலைக்காண நேற்று முன்தினம் முதல் நகர சந்தை மைதானத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டிருந்த போதும்நேற்று இரவுதான் வீரரின் பூதவுடலை தரிசிக்க வாய்ப்பு கிடடியது.

முதலில் தென்மராட்சி விடுதலைப்புலிகள் தளபதிகேடியும், சாவகச்சேரி அமைப்பாளர் தோழர் குஞ்சனும் அஞ்சலி செலுத்தினார்கள்.

சாவகச்சேரி மக்கள் ஒன்றியத்தினர், நோயாளர் நலன் புரிச் சங்கத்தினர், விழிப்புக் குழுவினர், இணக்க சபையினர் முதலானோர் தொண்டர் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர்


# கராட்டி நெல்சனின் சாகஸ நிகழ்ச்சிகள்

[கே. ரி. விக்கினஜெயம்]

மந்திரமின்றி மாயமின்றி உடல் வலிமையாலும் மனத் தைரியத்தாலும் தந்திர உபாயங்களைக் கையாண்டு சாகஸங்களை நடாத்திவரும் 'கராட்டி நெல்சனின்' நிகழ்ச்சிகளை சங்கானை கலாசார மண்டபத்தில் அண்மையில் காணக்கூடியதாகவிருந்தது.

சங்கானைக்கிளை கிராமிய உழைப்பாளர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியின்போது நெல்சனின் முதலாவது நிகழ்ச்சியாக காற்றுப்புகாத குழியினுள் ஒரு மணிநேரம் கிடத்தல் இடம் பெற்றது. சவக்குழிபோன்ற வடிவில் தோண்டப்பட்ட குழியினுள் நெல்சன் கிடக்க மேல பலகைகள் போட்டு மூடி காற்றுப்புகாத வண்ணம் கடதாசி விரித்துப் பின் மண்ணை மேலே போட்டு காவோலை போட்டு கொழுத்தப்பட்டது. ஒரு மணிநேரம் முடிவுற்றதும் மிக உற்சாகத்துடன் நெல்சன் மக்கள் முன் தோன்றினார். இவ்வீரச் செயலைப் பாராட்டி மக்களினது கரகோஷம் வானைப்பிளந்தது.

அடுத்து நெஞ்சினிலே கல் வைத்து உடைக்கப்பட்டது. அத்திபாரம் போடப் பாவிக்கும் பெரியகல்லை செல்சனின் நெஞ்சினிலே இருவர் தூக்கி வைக்க அக்கல்லை 16 இருததல் மடத்தலால் ஒருவர்பின ஒருவராக 5 தடவை அடித்தனர். 5வது நபர் அடித்ததின் பின்னர்தான் கல் மூன்றாக உடைந்தது. இதிலிருந்து இவரது உடல் வலிமையையும், மனத் தைரியத்தையும் புரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்தது.



ஒன்றரை அடி நீளமான 5நூல் கம்பியைவாயில்வைத்து வளைத்தல் அடுத்த நிகழ்ச்சி இருவர் கம்பியில் தூங்கினார்கள். ஆனால் கம்பியோ வளையவில்லை, பின்னர் கொஞ்சத்தூரம் வாயில் கம்பியுடன் இருவர் தூங்க நெல்சன் நடந்தும் பார்த்தார் ஆனால் கம்பி வளையவில்லை. பின்னர் பலமான இருவர் வந்து கம்பியில் தூங்கியபோதுதான் கம்பி வளைந்தது இவரது பல்லின் வலிமை இதில் தெரிந்தது.

அடுத்து இவரது உதவியாளர்கள் இவ்விரண்டு ஓடுகளாக நால்வர் வைத்திருகக அவ்வோடுகளை இமைப்பொழுதில் தலை, கை. கால் போன்றவற்றால் அடித்து நொருக்குதஇடம் பெற்றது. இதில் இவரது அவயவங்கள் ஒவ்வொன்றினதும் பலத்தை அறியக்கூடியதாகஇருந்தது.

இந்நிகழ்ச்சியோடு கராட்டி மல்யுத்தமும் நடைபெற்றன.

இவரது திறமையைப்பற்றி சிறி சுகந்தன் உன்பவர் பேட்டியும் கண்டார், இவரது தைரியத்திற்கான உணவைப் பற்றி கேட்கப்பட்டது நாளாந்த உணவைவிட ½ கிலோ கொண்டல் கடலை பசசையாக சாப்பிடுவது பற்றியும் 1போத்தல் பால், 5முட்டை, ½ கிலோ இறைச்சி தினமும் கூடுதலாக இலைகறிவகைகளும் சாப்பிடுவது பற்றியும் கூறினார். நாளாந்த உடற்பயிற்சி, மனவலிமை. மனத்திடம் ஆகியவைதான் இந்நிகழ்ச்சிகளை செய்ய உதவுகின்றன வென்றார்.

கிளிநொச்சி ஜெயந்தி நகரத்தை வசிப்பிடமாகக் கொண்ட நெல்சன் கிளிநொச்சிப் பகுதிகளில் தனது வீரத் திறமைகளைப் பல இடங்களில் காட்டியுள்ளார். இவர் தற்போது காரைநகர், வேலணை, சங்கானை போன்ற இடங்களில் சாகஸ நிகழ்ச்சிகளை செய்து முடித்துள்ளார்.

# “கிராமிய பொருளாதாரம் கூட்டுறவில் தங்கியுள்ளது”

பண்டத்தரிப்பு, வியா

“இன்றைய பொருளாதார கஷ்டத்தில தங்கள் அவசியத் தேவைகளுக்கு இலகுவாக குறைந்த வட்டிக்கு பணம் பெறுவதற்கு மக்களுக்கு அரிய சாதனமாக விளங்குவது ஐக்கிய நாணய சங்கங்களேயாகும் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்குக் கூட்டுறவே பெரும் தொண்டாற்ற முடியும். ஆகவே எமது பகுதிமக்கள் ஐக்கியநாணய சங்கங்களில் அங்கத்துவம் பெற்று அதன் நன்மைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்”

இவ்வாறு சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் பண்டத்தரிப்பு மக்கள் ஐக்கியநாணய சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஞானப்பிரகாசம் தொடர்ந்து உரையாற்றுகையில், கூட்டுறவுத்துறையின்மூலம் யாழ். மாவட்டம் ஒருகால கட்டத்தில் பெரும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டன என்றும் இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் விவசாய முன்னேற்றத்திற்கும் கூட்டுறவை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ஏ. ஜெகநாதன் உரையாற்றுகையில் யாழ் மாவட்டத்தில் ஐக்கிய நாணய சங்கங்கள்மூலம் தற்போது வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கென அரசு 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது இந்தப் பணம் யாழ். மாவட்டத்திற்குள் சுழற்சி முறையில் வீடமைப்புக்கடன்களை வழங்கிப் பயன்படுத்தப் படவுள்ளது” என்றார்.

அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கம் வீடமைப்புக் கடன்களை மேலும் பலருக்கு வழங்கக் கூடியதாக இருக்கும் என்று கூறிய அவர் இக்கடனைப் பெற்றவர்கள் குறித்த காலத்தில் அதனைத் திருப்பித்தர முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் உரையாற்றுகையில், சமாசம் ஆரம்பித்துள்ள அந்தியகால சேமிப்புத்திட்டம் அனைவருக்கும் மிகவும் பிரயோசனமானதொரு திட்டம் என்றும் ஐக்கிய நாணய சங்கங்களின் உறுப்பினர்கள் இத்திட்டத்தில் பங்குபற்றி அதன் நற்பயனை அனுபவிக்க வேண்டும்என்றார்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். அலோசியஸ் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (எ)

## அபிவிருத்திச் சங்கக் கட்டிடம்

புங்குடுதீவு, வியா,

புங்குடுதீவு வீராமலை கிராம அபிவிருத்திச் சங்கப் புதிய கட்டிட அமைப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

“இக்கட்டிடத்தைப் பூரணமாகக் கட்டி முடிப்பதெனாறல் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா தேவைப்படுகிறது. ஆனல் அரசின் நிதி ஒதுக்கீட்டின்படி அறுபத்தையாயிரம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது மிகுதி வேலைகளை நிறைவேற்ற பொதுமக்களனதும், சங்க அங்கத்தினர்களதும் பங்களிப்பு தேவைப்படும்” என்று சங்கச் செயலாளர் திரு. ரி. எஸ் செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

## சாரணர் பாசறை ஒத்திவைபபு

யாழ்ப்பாணம், வெள்ளி

கனகரெட்ணம் மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெற விருந்த குருளைச் சாரணர் பாசறை பின்போடப்பட்டுள்ளதென யாழ். மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் அறிவித்துள்ளது.

சாரணர் வருடாந்தப் பாசறை ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று 17ம் திகதியும், நாளை 18ம் திகதியும் நடைபெறவுள்ளது. [ஊ]

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியா

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற 28 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவாகினர்.

தலைவர் திரு. பொ. கணேசமூர்த்தி, செயலாளர் திரு சி. ஆலிங்கவேலாயுதம், பொருளாளர் திரு. த. பரமேஸ்வரன்.

8 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## விவசாய போதனாசிரியர்

பருத்தித்துறை, வியாழன்

விவசாயத் திணைக்களத்தால் விவசாயப் போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ள பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. வ. பரமேஸ்வரன் அம்பன் விவசாயப் போதனாசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்.

புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உடுப்பிட்டி, இமையாணன், வல்வெட்டிப் பகுதிகளின் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு பரமேஸ்வரன், குண்டசாலையில் விவசாய டிப்ளோமாப் பயிற்சி நெறியை மேற்கொண்டவராவார்.


பவர்ஸ் உரம்

வெல்ல முடியாதது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (D)


## இன்றைய பலன்

மாதம்:- புரட்டாதி

திகதி:- 31- (1986-10-17)

கிழமை:- வெள்ளி

திதி:- பூரணை

நக்ஷத்திரம்.- ரேவதி

மேடம்: தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும், தன்தொழிலில் சிறப்பும் உண்டு தெய்வழிபாட்டிலும் ஆர்வம் ஏற்படும்.

இடபம்:-நம்பிக்கை மோசடி நடக்கும், தானிய நஷ்டமும் ஏற்படலாம், எதிலும் அடக்கமாக நடந்து கொள்ளவும்.

மிதுனம்:- மனம்போல் வாழ்வு இன்றுமலரும். தாய்வழி ஆதரவுமுண்டு, பூமி லாபமுமுண்டு, தெய்வவழிபாடு நன்று.

கடகம்:- மருத்துவத்தறையில் ஈடுபடுவோருக்கு மகத்தான தினம், கல்விச்சிறப்புமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்

சிங்கம்:- ஆணவப்போக்கினால் அடிசறுக்க நேரிடும், அவப்பெயரும் சிட்டும் பொறுமை நன்று.

கன்னி;. உள்ளத்தில்உவகை துள்ளும், காதலர்கள் மகிழ்ச்சியடைவர், தொழில் துறையிலும் வெற்றியுண்டு.

துலாம்: சிந்தையில் குழப்ப நிலை தோன்றும், செலவினங்கள் அதிகரிக்கும், சிறிய விபத்துமேற்படலாம், தானிய நஷ்டமும் உண்டு.

விருச்சிகம்:- பிதாவழிப் பெருமையுண்டு, நீண்டநாள் டசை இன்று அகலும், பொதுப் டணிமூலம் புகழுமுண்டு

தனுசு:- வியாபார முன்னேறறமுண்டு, ஆக்கப்பணிகளில் முன்னேற்றமடைவீர்கள். குடும்பத்தில் இன்பம் பொங்கும்.

மகரம்:- வணிகத்துறையிலும் முன்னேற்றம்காணும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்தியாகும், சகோதர சந்தோஷமுமுண்டு.

கும்பம்:- நந்தை வேகத்தில் காரியங்கள் நடக்கும், மனத்தளர்ச்சியுண்டு, வேண்டாத நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

மீனம்:- ஏமாற்றம் தாக்கும் உண்மை இன்று ஊமையாகிவிடும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

திருமலை வே. ரவீந்திரன்

## தேநீர்சாலை: 3 தினங்கள் மூடப்பட்டது

நெல்லியடி, வியாழன்

உட்கொள்ள முடியாத அளவுக்குப் பழுதடைந்த சறியை உணவுவகையுடன் சேர்த்து விற்ற நெல்லியடிச்சந்தியில் உள்ள தேநீர்ச்சாலை யொன்று விடுதலைப்புலிகளால் தற்காலிகமாக மூன்றுநாள் மூடப்பட்டு திங்களன்று மீண்டும் திறக்க அனுமதிக்கப்பட்டது

இதுபோனற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு இது எச்சரிக்கையாகும் எனக் கூறப்படுகிறது.

## எழுச்சிதின கருத்தரங்கு

பண்டத்தரிப்பு, வியாழன்

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி இடது] நடாத்தும் ஒக்டோபர் 21 எழுச்சி நினைவுதின கருத்தரங்கு இம்மாதம் 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் சங்கானை நிற்சாமத்தில் நடைபெறவுள்ளது.

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் திரு. கே. செந்தில்வேல், சட்டத்தரணி சோ தேவராசா திரு. அ தணிகாசலம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## புலமைப் பரிசில் வழங்க தீர்மானம்

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் இரு மாணவிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

அண்மையில் இக்கல்லூரியில் நடைபெறவுள்ள 7ம் ஆண்டு பிரவேசப் பரீட்சையில் மிகக் கூடுதற் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவிக்கும், அண்மையில் கல்லூரியில் நடத்தப்பட்ட 6ம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் ஆகக் கூடுதற் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவிக்குமே சேவாச்சிரமம் இப் புலமைப்பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளது

ஆச்சிரமத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள இப்புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் இவ்விரு மாணவிகளும் வட இந்து மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் காலம் முழுவதற்குமான செலவுகளைச் சேவாச்சிரமம் பொறுப்பேற்றுக்கொள்ளுமென்றும் சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். [ஊ]

## இலவச சிகிச்சை

சாவகச்சேரி, வியாழன்

அறவழிப்போராட்டக்குழுவின் முதலுதவிப்பிரிவுஅடுத்த மாதநடுப்பகுதியில் மாபெரும் மருத்துவமுகாம் ஒன்றினைச் சாவகச்சேரியில் நடாத்தவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் சகலவிதமான வைத்திய பரிசோதனைகளும் இலவசமாக மேறகொளளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூலிகைச் சந்தை

சாவகச்சேரி, வியாழன்

சர்வதேச சமாதான சேவை இயக்கதாரின் ஆயுர்வேத மூலிகைச் சந்தை இம்மாதம் 25ம் திகதி சாவகச்சேரி டஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ளதுவிச் சக்கரவண்டிப் பாதுகாப்பு மண்டபத்தில் நடைபெறும்.

ஒவ்வொரு மாதமும் கடைசிச் சனிக்கிழமைகளில் இச்சந்தை கூடுமென இயக்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வட்டு.

## லயன்ஸ்கழக அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, வியாழன்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சில்லாலை மாதர் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத் திருத்த வேலைகளுக்காக 1.500 ரூபாவை அன்டளிப்புச் செய்துள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தனாசியார் தலைமையில் நடைபெற்ற வைபவமொன்றில் இதற்கான காசோலையைச் சங்கச் செயலாளர் திருமதி லற்றிசியா யேசுதாசன் பெற்றுக்கொண்டார்.

## சொற்பொழிவு

[நெல்லியடி, நிருபர்]

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்றுகாலை நடைபெறவுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தியினபோது யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன், ‘ஸ்ரீ இராமகிருஷ்ண-விவேகானநத இயக்கம்’ என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி சுப்பிரமணியம் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவார். வண எஸ் எஸ். சருணைராஜ் இறுதியில் பஜனைக்குத் தலைமை தாங்குவார்.

# ஸ்தம்பிக்கும் நிலையில் ஆரம்ப சுகாதாரநிலையங்கள்

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்பு குடும்பநல சேவையாளர் பதவி கடந்த பலமாதங்களாக வெற்றிடமாக இருப்பதால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமமடைந்து வருவதாகவும், சில்லாலையில் நிறுவப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் செயற்பட முடியாத நிலையில் ஸ்தம்பித மடைந்துள்ளதாகவும், ஆகவே இப்பதவிக்கு ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் யாழ்பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் சில்லாலை மாதர் முன்னேற்ற சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டத்தரிப்பு குடும்பநல சேவையாளராக 17 வருடகாலம் கடமையாற்றிய திருமதி அழகம்மா முருகையா கடந்த ஜூன் மாதத்தில் கோப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவுக்குபதவிஉயர்வு பெற்றுச்சென்றது குறிப்பிடத்தக்கது இவரின் இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படாதிருப்பதால் குழந்தைகளுக்கு தடுப்புஊசிபோடுதல். கர்ப்பிணிகள் பராமரிப்பு ஆகியன பாதிப்படைந்துள்ளன. பண்டத்தரிப்பிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையமும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

## புராணபடனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை மேற்கு சின்னக்கதிர்காமம் முருகன் கோவிலில் கந்தபுராணப் படிப்பு நடைபெறுகின்றது

வாரத்தில் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டும் இது நடைபெற்று வருகின்றது. இப்புராணப் படனத்துக்கு பண்டிதர் க. மயில்வாகனம் பயன் சொல்லி வருகின்றார்.

(ப)

## நகைகள் கொள்ளை

நெல்லியடி, வியாழன்

வதிரி பரமானந்த ஆச்சிரமத்துக்கு அண்மையில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத சிலரால் பல பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

நெல்லியடியைச் சேர்ந்த நல்லதம்பி மார்க்சண்டுவின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

(வா)

## சமாதான ஸ்தாபனம்

சாவகச்சேரி, வியாழன்

'சமாதானத்துக்கான நீண்டயாத்திரை' எனும் சர்வதேச மனிதஉரிமை சமாதான ஸ்தாபனம் இம்மாத இறுதியில் இலங்கை வருகிறது.

இலங்கைவரும் இக்குழுவினர் உயர்மட்ட அரச தரப்பினைச் சந்தித்து இந்நாட்டில் சமாதானம் அமைதி ஏற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதுடன் ஐந்து முக்கிய கேள்விகளையும் கேட்கவுள்ளனர்.

## நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியா

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தலைவர் எஸ். கதிரவேற்பிள்ளை, செயலாளர் செ. யோகர், பொருளாளர் எஸ் நல்லதம்பி

பத்துபேர்கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது. [சி]

★

வல்வெட்டித்துறை, வியாழன்

கற்கோவளம் மாதர் சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி திருமதி. கோகிலம் சோமசுந்தரம். செயலாளர் செல்வி இரத்தினசோதி சிதம்பரப்பிள்ளை, பொருளாளர் திருமதி. பொன்மணி புஷ்பராஜேஸ்வரன்.

நிர்வாக உறுப்பினர்களாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பொதுக்கூட்டம் நடைபெற்றது

புங்குடுதீவு, வியா

நயினாதீவு றிமிகேல் சுகவாழ்வுக் கழகத்தினரால் பயிற்சியளிக்கப்பட்ட தீவுப்பகுதியிலுள்ள அனைத்து சுகாதார தொண்டர்களும் பங்குகொண்ட விசேஷ பொதுக் கூட்டமொன்று வேலணை குடும்பநல சேவையாளர் செல்வி பாலாம்பிகை தலைமையில் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயமாக மக்களின் சுகாதார கேடுகள் பற்றி ஆலோசிக்கப் பட்டது. (ஊ)

## பிரயாணிகள் பாதிப்பு

வட்டுக்கோட்டை, வியா

காரைநகர் டிப்போவின் கட்டுப்பாட்டுள் இயங்கிவரும் 786 இலக்கபஸ்சேவை தடைப்பட்டுள்ளதால் மாணவர் அலுவலாளர்கள் பிரயாணிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

இதுவரை யாழ் நாவலி, மாவடியூடாக நான்குபஸ்கள் சேவையில் இருந்தன. தற்பொழுது எதுவும் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

## தரமுயர்த்த முடிவு

கொழும்புத்துறை, வியா

பனம் உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்துமுகமாக ஆய்வு மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதென இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் பனைவள ஆராய்ச்சிக் குழு முடிவுசெய்துள்ளது.

இப்பனைவள ஆராய்ச்சிக் குழுவின் கூட்டம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், யாழ் மாவட்டத் திணைக்களங்களின் உயரதிகாரிகளும் சமூகமளித்துப் பனைவள அபிவிருத்தி ஆய்வுபற்றிய தமது கருத்துக்களையும் ஆய்வுகளையும் வெளியிட்டனர்.

இவ் ஆராய்ச்சிக்குழுக் கூட்டத்தில் பனம் உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்துவதுபற்றிய யோசனைகள் ஆராயப்பட்டன. தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள ஆய்வு கூடத்தைக் கைதடியில் பாரிய அளவில் நிறுவப்பட்டுவரும் பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் பூர்த்தி அடையும்வரை தற்காலிகமாகப் பனைவள ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. பனம் பொருள்களின் தரமான உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் பற்றியும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. [இ]

## லியோ கழகம்

அராலி, வியாழன்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் லியோ கழகத்தை திரு. போட்டர் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

## வித்தியாரம்பம்

சாவகச்சேரி, வியாழன்

விஜயதசமி தினத்தன்று சாவகச்சேரியில் அமைந்துள்ள குருபவனத்தில் ஆத்மஜோதி நா. முத்தையா விசேடபூஜையுடன் சுமார்50க்கு மேலான சிறுவர்களுக்கு ஏடுதொடக்கி வைத்துள்ளார்.

## இளைஞர்குழு வேண்டுகோள்

சுண்டுக்குளி வியாழன்

கட்டாக்காலி ஆடு, மாடு, பன்றிகளை கட்டி வளர்க்குமாறு குழுவொன்று பொது மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது (சி)

## கோவிலுக்கு மின்னொளி

உடுவில் வியா

இணுவில்மேற்கு ஞானவைரவர் கோவிலுக்கு அதன் பரிபாலன சபைத் தலைவர் திரு. பெ. நல்லையா தலைமையில் மின்னொளி அமைக்கப்பட்டு அன்பளிப்புச்செய்யப்பட்டது.

இணுவில் சமாதான சபைத் தலைவர் திரு தி. சண்முகலிங்கம் மின்னொளியைப் பொருத்திவைத்தார். மணிக்கூட்டுத் திரையை தவத்திரு. ஆ சோதிலிங்க சுவாமிகள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

உடுவில் முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு எஸ் முத்துலிங்கம், பண்டிதர் திரு சா. வே பஞ்சாட்சரம். திரு. பெ, கந்தசாமி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்

கோவில் திருப்பணி மின் ஒளி மணிக்கூடுஆகியவற்றுக்கு இணுவிலைச் சேர்ந்த திரு ஆறுமுகம் குடும்பத்தினர் பெரிதும் உதவினர்.

## நன்கொடை

கொழும்புத்துறை வியா

மாவட்ட அபிவிருத்திச்சபையின் காங்கேசன்துறை உப அலுவலகப் பகுதியிலுள்ள சில சனசமூக நிலையங்களுக்கான வருடாந்த அரச நன்கொடை பணம் 1980ம் ஆண்டிலிருந்து வழங்கப்படாது தாமதிக்கப் பட்டுள்ளதென்று யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது

1981, 1982ம் ஆண்டுகளுக்கான இப்பகுதிச் சனசமூக நிலையங்களுக்குரிய அரச நன்கொடைப் பணம் 12,500 ரூபா யாழ். அபிவிருத்திச் சபையில் தேங்கியுள்ளதாகவும் 1979ம் ஆண்டிலிருந்து 1982ம்ஆண்டுவரை கூட சில சனசமூக நிலையங்களுக்கு அரச நன்கொடைப்பணம் வழங்கப் படாதிருப்பதாகவும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு சி சி. வரதாசா உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் சுட்டிக் காட்டினார்.

## விஞ்ஞானம் அவசியம்

பளை வியா

''விஞ்ஞானம் இன்று எங்கும் எதிலும் ஆட்சி செலுத்துகின்றது பழையன கழிதலும புதியன புகுதலும் விஞ்ஞானம் காரணமாகி மனிதன பழையனவற்றை விடுத்துப் புதியன பலவற்றை தனக்குச் சாதகமாக்கி வாழ்வதற்கு இந்த விஞ்ஞானம் காரணமாகவுள்ளது''

பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான தினக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சிமாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். மன்சூர் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்

அவர்தொடர்ந்து கூறியதாவது: ''விஞ்ஞானம் ஒவ்வொருவர்வாழ்க்கையிலும்இரண்டறக் கலந்துள்ளது. இவ் விஞ்ஞானக் கழகங்கள் மூலம் மாணவரினது விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கு இது மிகவும் உதவுகின்றது''

இறுதியில் விஞ்ஞானப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கு ஜனாப் மன்சூர் பரிசில்களை வழங்கினார் திரு க. நடனசபாதி நன்றிகூறினார்.

## செயற்குழு உறுப்பினர்

பண்டத்தரிப்பு, வியா

வடலியடைப்பு விழிப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. தம்புதேவராசா, செயலாளர்: திரு. குமரேசஸ்வரதாஸ், பொருளாளர்: திரு. மு. சின்னத்துரை செயற்குழு உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பொதுக் கூட்டம்

பண்டத்தரிப்பு, வியா

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் விசேட பொதுக் கூட்டம் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க வண்டபத்தில் இம்மாதம் 26ம் திகதி சனிக்கிழமையன்று சமாஜத் தலைவர் பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு, எஸ் ஞானப்பிரகாசமுட்பட பலர் இதில் கலந்துகொள்வார்கள். (சி)

## சிறுவர்பாடசாலை தளபாடங்கள் அன்பளிப்பு

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் மேற்கு குகன்குல சங்கத்தினர் சுழிபுரம் கலைமகள் பாலர்பாடசாலைக்கு ரூபா ஆறாயிரம் பெறுமதிமிக்க தளபாடங்களை அன்பளிப்பு செய்துள்ளனர். சங்க ஐம்பதாவது ஆண்டு விழா நினைவாக இவ் அன்பளிப்பு செய்யப்பட்டது சங்கப் போஷகர் திரு க. அப்புக்குட்டி தளபாடப்பொருட்களை பாலர் பாடசாலை ஆசிரியையிடம் சம்பிரதாய பூர்வமாக வழங்கினார்.

இந்த அன்பளிப்புப்பொருட்களில் கதிரை வாங்கு,மேசை, சிறுவர் இருந்து படிப்பதற்குரிய கதிரைகள் அடங்குகின்றது. தரையில் இருந்து கல்விகற்றவர்களுக்கு இத்தளபாட அன்பளிப்புபெரும் உதவியாகவுள்ளது,

# கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் செப்டம்பர்மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அம்மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகள் மூலம் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவென கிளிநொச்சி கச்சேரி கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் மாத ஓய்வூதியக்கொடுப்பனவு சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜூன்மாதம் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கஷ்டமான சூழ்நிலைகளின் மத்தியிலும்கிளிநொச்சி கச்சேரி ஊழியர்கள் சேவையாற்றியபோதும், தவிர்க்க முடியாத காரணங்களால் செப்டெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவில் சற்று தாமதம் ஏற்பட்டுவிட்டது. உரியகாலத்தில் பென்ஷன் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டபோதும்,கிளிநொச்சிமாவட்ட வங்கிகள். கடந்த ஜூன்மாதம் தொடக்கம், இயங்காது மூடப்பட்டு இருந்ததாலும் ஓய்வூதியம் பெறுபவர்களை இம்மாவட்டத்திலுள்ளஏதாவதொரு கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கைத் திறக்கும்படி, கேட்டுக்கொண்டபோதும் ஒருசிலர் மட்டும் இக்கோரிக்கையை நிறைவேற்றிய அதே நேரத்தில் ஏனையோரும் சேமிப்புக்கணக்கை உரியகாலத்தில் திறந்து ஒத்துழைப்புத் தரத் தவறியமையும் செப்டெம்பர்மாத ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் அடைந்தமைக்கு உரியகாரணங்களாகும்.

ஏற்கனவே கிராமிய வங்கிகளில் சேமிப்புக்கணக்குகளைத் திறந்துள்ள ஓய்வூதியம்பெறுவோர் தமக்கு உரிய கிராமிய வங்கிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க ஒக்டோபர் மாத ஓய்வூதியக்கொடுப்பனவுகளை காலதாமதமின்றி வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஜெகா நெந்தில்நாதன் பணிப்பினபேரில் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் கச்சேரிக்கான கணக்கொன்றை திறப்பதற்கு நடவடிக்கைகளை கணக்காளர் மேற்கொண்டுள்ளார். [வா]

## புதிய சனசமூக நிலையம்

சாவகச்சேரி, வியாழன்

மகாத்மா சனசமூக அபிவிருத்தி நிலையம் எனும் பெயரில் மறவன் புலவில் ஒரு புதிய சனசமூக நிலையம் உருவாக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

## புத்தகங்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி, வியா

லயன்ஸ் கழகங்களின் உலக சேவை தினத்தினை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ்கழகம் சாவகச்சேரி சிறுவர்பராமரிப்பு நிலையத்தில் இருக்கின்ற சிறுர்களுக்கு பொம்மைகள், உடைகள், சிறுவர் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி இன்ரறக்ற் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பொறுப்பாசிரியர் திரு. ஜே. ஏ. ஜே. அருமைநாதன் தலைமையில் கல்லூரி யூனியன் மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; பாக்கியறஞ்சித் உபதலைவர் பி. பி. சிவகுமார், செயலாளர்: என், ஏ. நிரஞ்சன், உப செயலாளர்: என். பாக்கியறெயினோல்ட். பொருளாளர்: எஸ். ரி. ரவிலோச்சன செயற்குழு உறுப்பினர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## வல்வைக் கடலில்

# கடற்றொழிலாளர் கைவிட்ட உபகரணங்கள் மீட்பு

வல்வெட்டித்துறை, வியா.

கடற்றொழிலாளர்களால் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் கைவிடப்பட்ட வலைகள், கட்டுமரங்கள், மற்றும் கடற்றொழில் அணியங்கள் அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் கடற்படையினரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இவர்கள் கடலில் இப்பொருட்களை பல வந்தமாக கைவிட வேண்டிய நிலை உருவாகியிருந்தது.

இதனையடுத்து மேற்படி பொருட்களை இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கண்டெடுத்து வலவை கடற்றொழிலாளர் விரிவாக்க சங்கத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட இப்பொருட்களை தகுந்த அடையாளங்களை காட்டி பெற்றுக் கொள்ளுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தபோதும் இதுவரை உரியவர்கள் எவரும் இவற்றினை பெற்றுக் கொள்ளவில்லை. (சி)

# களவாடப்பட்ட பொருட்களை விழிப்புக்குழு மீட்டது

பண்டத்தரிப்பு, வியா.

தமக்கு கிடைத்த முறைப்பாடு ஒன்றை அடுத்து பிரான்பற்று பகுதியிலுள்ள தோட்டம் ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த "பைப்புகளை பிரான்பற்று விழிப்புக் குழுவினர் கைப்பற்றினர்கள்.

பிரான்பற்று வாசியான பொன்னுத்துரை சுப்பிரமணியம் என்பவர் தமக்கு சொந்தமான பிளாஸ்ரிக் பைப்புக்கள் களவாடப்பட்டிருப்பதாக பிரான்பற்று விழிப்புக் குழுவுக்கு செய்த புகாரை அடுத்து அப்பகுதியிலுள்ள தோட்டம் ஒன்றில் மேற்படி பைப்புக்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை விழிப்புக்குழு விசாரணை செய்த போது அப்பகுதியில் திருடப்பட்ட பல மின்சார மோட்டார்கள் பற்றியமமும் வெளியாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டுக்காரர், சாட்சிகள் சந்தேகநபர்கள் ஆகியோரின் வாக்கு மூலங்கள் பதிவானபின் தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# வல்வை நகராட்சி மன்றம் இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம், வல்வை இராணுவ முகாமுக்கு அண்மையில் 1000 மீற்றர் எல்லைக்குட்பட்டு இருந்ததால் வல்வை இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு அடிக்கடி இலக்காகிசரிவர சேவைசெய்ய முடியாதிருந்தது. வல்வை நகர்சந்தியில் அமைந்துள்ள நவீன சந்தை மேல்மாடிக்கட்டிடத்துக்கு கடந்த திங்கள் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் சேவையின் முதற் கட்டமாக வல்வை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட தெருக்களில் திரியும் கட்டாக்காலி நாய்கள் சொறிநாய்களை ஒழிப்பதில் நகராட்சி மன்றத்தனரும் சுகாதாரப்பகுதி பரிசோதகர் திரு எஸ். ஏ. துரைசிங்கமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இன்றுமுதல் இந்த நாய்ஒழிப்புவேலை ஆரம்பமாகும்.

இப்பகுதியிலுள்ள பெரும்பாலான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறியுள்ள

(9ம் பக்கம் பார்க்க)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இ. இராசநயகம்


தோற்றம்: 20-05-1905
மறைவு: 28-09-1985
திதி: 17-10-1986

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் அமைதியின் இருப்பிடமாய் யாவருக்கும் வழிகாட்டியாய் உற்றார், உறவினர், அயலார் போற்ற நடந்த எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே, எங்களை விட்டுப் பிரிந்து ஒரு வருடமாயினும் உங்கள் நினைவால் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், மைத்துனர்,
பேரப்பிள்ளைகள்

'இராஜ வில்லா'
கே. கே. எஸ். றோட்,
இணுவில். C 5218

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



இரத்தினம்
பாஸ்கரன்
(சின்னத்தம்பி)
(நெடுந்தீவு)

பிறப்பு: 18-02-1957
இறப்பு: 24-09-1985

அன்னிய அடக்கு முறையாளனின் துப்பாக்கிகளால், சிவப்பாகிப் போன எங்கள் தேசத்திலே, பலியாகிப்போன பலரிடையே, உன்னையும் நாங்கள் இழந்து போனோம் நண்பா, இழந்து போனது நாங்கள் மட்டுமல்ல, எங்கள் மண்ணோடு தம்மை இணைத்துக் கொண்டு, வியர்வையையும், உழைப்பையும். எம்மண்மீது, நெல் மணியாய் விளைய வைத்தும் தம் வாழ்வில், வறுமையையும் துயரத்தையும் மட்டுமே கண்டு கொண்டிருக்கும்,, இந்நிலத்தின் முதுகெலும்பாய் வாழும் மக்கள், அவர்களும் தான் உன்னை இழந்து விட்டனர். இம் மண்ணில் தம் வாழ்வுக்கான சுதந்திரத்தை, இழந்து போன அனைவரின் விடுதலையும், உழைக்கின்ற மக்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், ஒடுக்கப்படும் அனைத்து மக்களும், தம் கரங்களில் அரசு அதிகாரத்தை எடுத்துக் கொள்வதால் மட்டுமே, மக்களுக்கான ஜனநாயக உரிமைகள் உறுதி செய்யப்படும் என்பதற்காய், மக்கள் யுத்தப் பாதையிலே அணிதிரட்டுவதற்கு -நீ உன்னைப் பிணைத்துக் கொண்ட இந்நிலத்தின் மக்களிடையே விட்டுச் சென்ற விடுதலையின் புரட்சி வித்துகள், இன்று பலமில்லாததவையாயிருந்தாலும், நாளை மக்களிடையே வேரூன்றி சக்தியாய் உருவெடுத்து உயரும் போது நீ மக்களின் எண்ணங்களில் பசுமையாய் நிலைத்திருப்பாய் நடந்த பாதையின் அடிச்சுவட்டில், எங்கள் பாதங்களை பதித்து முன்னேறுவதுதான் உன்னோடு இணைந்து நின்ற எங்களின் அஞ்சலியாகும்.

நண்பர்கள்.
கிளிநொச்சி. C 5242

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

"முல்லைத்தீவு மாவட்ட ஆங்கில ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றி தமது திறமையை வெளிக்காட்டிய தன்மூலம் முறையாக ஆங்கிலக்கல்வியை மாணவர்களுக்கு புகட்டவேண்டும் என்ற ஆவலை தெளிவாகக் காட்டினார்கள்."

இவ்வாறு யாழ் மாவட்ட ஆங்கில சேவைக்கால பயிற்சி ஆசிரியர் திரு. எஸ். தெய்வதவபாலன், முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்ச்சி முள்ளியவளை வித்தியானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றபோது கூறினார்.

இக்கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 44 ஆங்கில ஆசிரியர்கள் பங்குபற்றினர்கள்.

தொடர்ந்து பேசிய திரு. தெய்வதவபாலன் முல்லைத்தீவு மாவட்ட ஆங்கில ஆசிரியர்கள் பயன் பெறும்வகையில தமக்கு சகலவசதிகளையும் வழங்கி முல்லைதீவுக்கு அனுப்பிவைத்தமைக்காக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தலிங்கத்தைப் பாராட்டினார்.

இறுதியாக முல்லைத்தீவு கல்வியதிகாரி திரு தியாகராஜா நன்றி கூறினார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சு. குமாரவேல்
(பீற்றர்)
(அரியாலை)

தோற்றம்: 18-09-1964
மறைவு: 17-10-1985

மறைந்தசோ ஓராண்டுகள்? உன் மரணம் இங்கே பதித்த செந்தடங்கள் களத்திலே நீ புகுந்து பதித்த வீரக் காலடிச் சுவடுகள் இங்கு இன்னும் மறையவில்லை பொன்வதனம் புரிந்த சாதனைகள் ஏட்டில் எழுதியவையல்ல மனதில் பதித்தவையே இனமிங்கே வாடுவதையே மனம் விரும்பிப் போராடப் புறப்பட்ட வேங்கையின் மைந்தனே உன் நினைவு என்றும் மறாது.

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர் சகோதரர்கள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

C 5249

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கருணைபபிரகாசம்
ஜெயப்பிரகாசம்
(ஜெயா)
(தொண்டமனாறு)

அன்னையின் மடியில்: 20-06-1958
ஆண்டவன் அடியில்: 29-10 1985
திதி: 18-10-1986

ஓராண்டு காலம் ஓடியே சென்றாலும் ஓடாது உன்நினைவு ஓரங்க நாடகத்தில், பாரண்டு பல கனவு கண்டாய் பாரினிலே பாவியுனை பிரிந்து நாம் பார்த்ததென்ன பூமியிலே சீராண்டு சிறப்புடனே சாளரத்தில் யாம் வாழ சிறந்த நல் வாழ்வை சிறப்பாய் அமைப்பாயே, யாராண்டு யாம் சிறப்போம் யாரெம்மை பார்ப்பார் யாதுமுன் துணையன்றியேதும நடவாதே.

உங்கள் பிரிவால் வாடும்,
அம்மா, ஐயா,
அன்புத்தங்கைகள்,
அருமைத்தம்பி,
உற்றார், உறவினர்.

C 5191


# GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

A 1391


## அதிஷ்டலாப சீட்டு முடிவுகள்

### மானிப்பாய் உதயசூரியன் சனசமூக நிலைய

அதிஷ்டலாப சீட்டு முடிவுகள். பரிசு பெற்ற இலக்கங்கள் வருமாறு:

2619, 3867, 2824, 4073, 2808, 1885, 0593, 2915, 3360, 4077, 1727, 0960, 2636, 1497, 2257, 0441, 2565, 0795, 0873, 2372, 2523, 2209, 2814.

[C 5057]

மாணவர்கள்

# கல்வியுடன் ஏனைய துறைகளிலும் ஆற்றலை வளர்க்க வேண்டும்

மாவிட்டபுரம், வியா சிறுவயதிலேயே மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி போதாதென்று 'ரியூசன்' வகுப்புகளுக்கும் அனுப்பி சுயமாகச் சிந்திக்கும்ஆற்றலைக்கெடுப்பது நல்லதல்ல. கல்வியுடன் ஏனைய துறைகளிலும் அவர்கள் தாமாகவே சிந்தித்து தமது ஆற்றலை வளர்க்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.''

இவ்வாறு அளவெட்டி ட க்கு அ. மி. த க. வித்தியாலய பரிசளிப்புவிழா, பெற்றோர் தினவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றிய வடமாநில கல்வியதிகாரி திரு. இ. க. குலசேகரன் கூறினார்

வித்தியாலய அதிபர் திரு ப. தளையசிங்கம் தலைமையில் நடைபெற்றவிழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''உயர் வகுப்பில் பயிலும் மாணவர்கள் தமது சந்தேகங்களைத் தீர்த்து கல்வியில் முன்னேற 'ரியூசன்' வகுப்புகள் சில சமயங்களில் உதவலாம், ஆனால் சிறுவயதுடைய கனிஷ்ட வகுப்பு மாணவர்களையும பெற்றோர்கள் ரியூசன் என்று சொல்லி அனுப்பவிடுவதால் அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிடுகிறார்கள், விளையாட்டுத்துறையிலும் மற்றும் துறைகளிலும் அவர்களுக்கு ஈடுபாடு குறைந்து உடல்உள வளர்ச்சிகுன்ற ஏதுவாகிறது. ஆகவே சிறுவயது மாணவர்களை ரியூசனுக்கு அனுப்புவதை பெற்றோர் நிறுத்த வேண்டும்'' என்றார்.

சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு பேசுகையில் ஒழுக்கத்தைப் பேணும் கல்வி முறையே மிகவும் அவசியமானது. ஒழுக்கமில்லையேல் கல்வியை எவ்வளவு அதிகப் பெற்றாலும் பயனில்லை என்றார்

மற்றும் வட்டாரக் கல்வியதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம், இளைப்பாறிய அதிபர் திரு. அ விஸ்வநாதன், பண்டிதர் க நாகலிங்கம், கல்வித் திணைக்களத்தைச்சேர்ந்த திரு. க. பொன்னுத்துரை ஆகியோரும் உரையாற்றினர்.

திருமதி தேவகன்யா குலசேகரன் பரிசில்கள் வழங்கினார்.

## வீதி திருத்தம்

பருத்தித்துறை, வியாழன் வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகராலய தெற்குவீதி சுமார் 50,000 ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான 20.000 ரூபா நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து யாழ். மாவட்டச் செயலாளரால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதி 30.000 ரூபா குருக்கட்டு விநாயகர் ஆலய நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இதனால் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் செல்லும் மக்கள் பயனடையவுள்ளனர்.

[ஓள]


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார் போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-கிளினர். ஹறவேஸ்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A 1390]


## நவீன அயுதங்களுடன் இராணுவ உடையில் வந்தவர்கள் சுட்டனர்

வவனியா, வியாழன். மாமடுவ வயல் வெளியில் வைத்து இனம் தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட சுப்பிரமணியம் செல்வரட்ணம் (வயது 41) அவுசதகாமி (வயது 48) ஒருவரது மரண விசாரணை பதில் நீதவன் ஆர். வி விவ்வராசா முன்னிலையில் நடைபெற்றது

மரணவிசாரணையில் அவுசதகாமியின் மகள் சாந்தா விக்கிரமசிங்க (21 வயது) சாட்சியமளிக்கையில்கூறியதாவது:

நானும் இறந்த எனது தகப்பனும் காட்டுமாங்குளத்திலிருந்து சம்பவதினம் காலை சூடு அடிப்பதற்கு வேலைக்கு வந்தோம். காலை 9 மணியளவில் இறந்த செல்வரட்ணம் தனது உழவு இயந்திரத்துடன் வயலுக்கு வந்தார்.

சூடு அடித்து முடிந்து பிற்பகல் 5 மணியளவில் நெல்லை உழவு இயந்திர பெட்டியில் ஏற்றினோம் அப்போது கள்ளிக்குள பக்கமாக வெடிச் சத்தம் கேட்டது.

சிறிது நேரத்தில் இராணுவ உடையில் நவீன ஆயுதங்களுடன் 25 பேர் எம்மை நோக்கி வந்தனர். அருகில் வந்தவுடன் செல்வரட்ணத்தைச் சுட்டனர் நான் பயத்தினால் ஓடினேன்

அப்போது எனது தகப்பனாரை அவர்கள் இழுத்துச் சென்றதைபார்த்தேன் குண்டு சத்தமும் வெடிச்சத்தமும் கேட்டது. அவர்கள் உழவு இயந்திரத்தினை எடுத்துச் சென்றார்கள்.

நீண்ட நோம் கழித்து ஸ்தலததிற்குவந்து பார்தத போது தகப்பனார் குற்றுயிராக துப்பாக்கி சூட்டுக்காயத்துடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனடியாக மாமடுவ இராணுவ முகாமிற்கு தகப்பனாரை எடுத்துச் சென்றேன் அங்கு பின்னர் இறந்து விடடார்.

இறந்த செல்வரட்ணத்தின் தகப்பன் விசுவர் சுப்பிரமணியம் (70 வயது) சாட்சியமளிக்கையில்: மாமடுவவுக்கு சூடு அடிக்க சென்ற தனது மகனை யாரோ சுட்டுப்போட்டார்கள் என அறிந்ததாகவும் இறந்தவர் தனது மூத்த மகன் எனவும் இவர் கூறியுள்ளார்.

பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது

## சந்திரகும்பவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி இன்றிரவு (17-10.86) பூரண சந்திரகிரகணம் நிகழ இருப்பதால் கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் எழுந்தருளியிருக்கும் மன்றுளாடும் விநாயகர் ஆலயத்தில் சந்திரகும்பவிழா மாலை 5-00 மணியிலிருந்து 9-00மணிவரை நடைபெறும்.


## கனடா பிரயாணம்

எமது பிரதிநிதி இம்மாதம் 22 ந் திகதி கனடா வரை அழைத்துச் செல்லுகின்றார். சொற்ப இடங்களே உண்டு. உடனடியாக தொடர்புகொள்ளவும்;

மற்றும்

டென்மார்க் / ஜேர்மனி / பிரான்ஸ்

பிரயாணங்கள் ஒவ்வொருவாரமும் நடைபெறுகின்றன.

லிப்ருஸ் லிமிட்டெட்

LIBRAS (TRAVELDEPT.)LTD.

R. G. BUILDING
No. 70, STANLEY ROAD,
JAFFNA. A 2803



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் ஜேர்மனி குவைத் சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார்போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு விதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
N. Bala

பஸ் இல. 764, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

[A-1395]



## பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா ★ லிபியா

ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
5 வருட அனுபவத்துடன் வயது: 25 44 வரை
★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்
★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். உடன் பாஸ்போட், 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]



## பிரயாண ஒழுங்குகள்

# அவசர தேவை

★ சவூதி அரேபியா ★ லிபியா

(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
5 வருட அனுபவத்துடன்
வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்
பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

உடன் பாஸ்போட், 20 படம்

மற்றும்

லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1393)

## வடமராட்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தோரணங்கள் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சகல இடங்களிலும ஒலிபெருக்கிகள் சோக கீதங்களை எழுப்பிக் கொண்டிருந்தன.

கடைகள்யாவும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமூகமளிக்கவில்லை. தனியார் வாகனங்கள் யாவும் தமது சேவைகளை காலை 9 மணியுடன் நிறுத்திக் கொண்டன.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி ஜேசுரட்னம் ரோசம்மா குருஸ்**

மலர்வு: 3-5-27

உதிர்வு; 17 9 86

சிவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள். இவரின் ஆன்மா சாந்திக்காக 18-10-86 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இலக்கம் 30, புனித
செபஸ்தியார் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(C 5253)

## தேவை

சங்கீதம், பரதம், வயலின் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை டிப்பிளோமா பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை. தொடர்பு: 103, ஐயனார்கோவில் ரோடு, யாழ்ப்பாணம். (C 5257

புதிய வெளியீடு
**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30
பழிக்குப்பழி. வாங்கும், திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

**லிடோ**
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
விரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கனி
**நியாயம்**

## 45-வது நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை இரவீந்திரன் (குயிலன்)**

அன்னையின் மடியில்!
04-07-1964

அலைகடலின் நடுவில்
ஆள்பவன் பிடியில்:
03-09-1986

வீரமும் விளையும் எம் அலவை மண்ணில் ஈரமும் உண்டென்று உலகம் ஏற்றிட வேங்கையாய் அலைமீது தாவி நீ வந்திட்டாய் நாங் கையினால் அணைத்திட்டுப் பின் களத்துக்கு அனுப்ப ஏங்கியிருக்கையில் என்னுயிர் போனால் நீ ஈரமில்லா நாய்க்குலத்தார் உன்னைத் துரத்தி வந்தனரோ? குயிலோசை கேட்டு நாம் மகிழக் கொடுக்கவில்லை! அயலாரும் ஊரவரும்-உற்றாரும் வேம்புண்ணாய் வேகின்றோம் நாமிங்கே! நீ வீரன் நீ வேங்கை! நீ தியாகி! ஊரெல்லாம் பேசுவது ஒன்றுமட்டும் எம்முயிரை வைத்திருக்கு!

எங்கள் ரவி!
குகைக் குயிலே!
எங்கள் ரவி களப் பலி
எங்கள் கண்ணே ரவி!

இம்மண்ணை மீட்கப் புறப்பட்ட உன்னை நாம் மீட்பதற்கு இயலவில்லை! நீ சிந்திய இரத்தம் எம் ரத்தம்! நீ விட்ட மூச்சு எம்மூச்சு!! நீ கண்ட வழியே எமது வழி!!! நீ எம்மைச் சந்திக்க நாளில்லை! நீ நிம்மதியாய் தூங்கடா தூங்கு! நாமோ தூங்காத் துயிலில் நீந்தி உன்னை ஒருநாள் கண்டிடுவோம்.

தாய், தந்தை,
சகோதரர்.

அவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றி தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த சகல உதவிகளும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் எம் நன்றி. அவரது 45 நாள் வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

கார்த்திகேசு
இராஜரட்ணம்.
'இராஜ வில்லா'
நாவலடி,
அராலி. C 5259

## வல்வை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும், அனேகமான நாய்கள் நிராதரவாக விடப்பட்டுள்ளதாலும் தெருக்களில் உள்ள நாய்கள் பல பொதுமக்களைக் கடிப்பதாலும் தெருக்களை அசிங்கப் படுத்துவதாலும் இந் நாயொழிப்பு வேலை துரிதமாக செயற்படுத்தப்படவுள்ளது

## யாழ்ப்பாணத்தில் சிவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச் செயலகம் யாழ் மாநகரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் கண்டி வீதியில் இருமருங்கிலும அமைந்துள்ளது. இத்திணைக்களங்களுக்கு யாழ் மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் தங்களுடைய அலுவல்களைச் செய்வதற்காக ஒரே நேரத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் வந்து சூழுமி தங்கள் அலுவல்களைக் கவனிப்பர். இங்கு கடமையாற்றும் சகல ஊழியர்களும் இன்றைய சூழ்நிலையில் தமது உத்தியோக அலுவல்களை அத்தியாவசிய சேவையாகக் கருதிக் கடமையாற்றுகின்றனர். அவைகளில் அகதிகளுக்கு அளிக்கப்படும் உணவு முத்திரை வேலைகள் மற்றும் உளப்பாற்றுச் சம்பளம், அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள், நாளாந்த நிர்வாக அலுவல்கள். அபிவிருத்தித் திட்ட வேலைகள். கமத்தொழில் வேலைகள், தேர்தல் தொழிற்பாடுகள், குடிவரவு குடியகல்வு சேவைகள், பிறப்பு இறப்பு, பத்திரம் வழங்கல் காணிப்பதிவு போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இன்றைய காலகட்டத்தில் மேற்குறிப்பிட்டவை யாழ் மாவட்ட மக்களுக்கு அத்தியாவசியமானவையாகும். இவ்வாறான வேலைகளை விசுவாசமாகவும், கடமையுணர்வுடனும் சேவையாற்றி இன்றைய சூழ்நிலையில பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட அரச ஊழியர் விபரங்களைத் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

கச்சேரி சாரதியான திரு. எஸ். அருள்நாதன் 86 யூன் 4-ல் கொழும்பிலிருந்து உணவு முத்திரை கொண்டு வரும்போது கிளிநொச்சியில் ஷெல் தாக்குதலுக்குள்ளாகி மரணமானார். அவருடன் வந்த யாழ் அரச அதிபரும் மூன்று உயரதிகாரிகளும் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்கள்.

85 மே 14ம் தேதி யாழ்ப்பாணம் உள்நாட்டு வர்த்தக கட்டுப்பாட்டுற பொறுப்பதிகாரி திரு. ஜேசுதாசன் மற்றும் கச்சேரி ஊழியர் செல்லையாவும் நெடுந்தீவு கடலில் குமுதினிப் படகில் வந்தபோது குத்திக்கொல்லப்பட்டனர்.

யாழ் தேசிய வீடமைப்பு பகுதியில் கடமையாற்றுப திரு. கே. வி. தங்கராசா நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் கடமையிலீடுபட்டிருந்த சமயம் 86 ஜூன் 28ல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்.

1984 ஜூலை மாதம் திரு இரத்தினசிங்கமும் மற்றொரு பெண் ஊழியரும் தமது கடமைக்கு செயலகம் வந்து வீடு திருப்பிய சமயம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தனர்.

ஒய்வூதியக் கிளை பிரதம லிகிதர் திரு. தவராசா சாப்பாட்டு இடைவேளையின்போது இராணுவம் சுட்டு காயமடைந்தார்.

1983 யூலை மாதம் கச்சேரி ஊழியர் திரு. இராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

86 அக்டோபர் 11ல் அசினர் ஆஸ்பத்திரியில் விழுந்த "ஷெல்" ஆஸ்பத்திரி கட்டிடத்தின் ஒரு பகுதியைச்சேதமாக்கியதையும் அறிந்திருப்பீர்கள்.

இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் கச்சேரி ஊழியர்கள் அனைவரும் நிறைந்த பீதியுடனும், அளவு கடந்த மனவேதனையுடனும் எந்நேரமும் உயிராபத்தை எதிர்பார்த்துக் கொண்டு சேவையில் ஈடுபட்டுள்ளோம்.

இம் மகஜரின் பிரதி ஒன்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[ச - கே]

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரர்தியிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

இலங்கை பிரச்னை பற்றிக் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது: "இலங்கை இனப்பிரச்னையில் இலங்கை அரசாங்கத்தையும், தமிழ்ப் போராட்டக் குழுக்களையும் பேச்சு நடத்தச் செய்வதிலேயே இந்தியா முயன்றுவருகின்றது.

இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசு புதிய யோசனைகளை இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த யோசனைகளை இந்தியா பரிசீலித்துவருகின்றது. இவ்வாறு பிரதமர் காந்தி சொன்னார், [கே]

## எரியூட்டும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

[இக்கட்டுரைத் தொடர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ராணுவப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள 'எரியூட்டும் குண்டிலிருந்து பாதுகாப்பு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

(முற்றும்)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**நாகலிங்கம் சுப்பிரமணியம்**

தோற்றம்: 17-6-1922
மறைவு: 28-09-86

28-9-86ல் சிவபதம் எய்திய காங்கேசன்துறை கொத்தாவத்தையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் கீரிமலை வாசகருமாகிய ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர் மேற்பார்வையாளரும் கீரிமலை விழிப்புக்குழுத் தலைவரும் ஆகிய நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டி 18-10-86 சனிக்கிழமை அன்னாரது கீரிமலை இல்லத்தில் நடைபெறும் உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். அன்னாரின் மரணச்சடங்கிற் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன் சகோதரர்கள்
பேரப்பிள்ளைகள்.

லட்சுமி வாசா
கீரிமலை. (C 5232)

## முகமூடி ..

[1ம் பக்கத்தொடர்ச்சி]

இப் பிரசுரத்தை புங்குடுதீவு கலை இலக்கிய நண்பர்கள் புதுசுகள் அளவெட்டி ஞாயிறு படைப்பாளிகள் வட்டம் கலை இலக்கிய வட்டம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ளன. [எ]

## கால்நடை...

[1ம் பக்க தொடர்ச்சி]

தரங்கு டாக்டர் எம். கோபால சுந்தரம் தலைமையில் நடைபெறும். இங்கு 'கால் நடைகளின் சத்துணவு' -டாக்டர் எஸ் மாணிக்கவடிவேல், 'மேய்ச்சல் தரையின் அவசியம் -டாக்டர் எஸ். இரவீந்திரநாத், 'உயிரின விருத்தி' -டாக்டர் ரி. அரசரட்ணம் நோய்களும் தடுப்பு முறைகளும்' - டாக்டர். செல்வி கே. மகாலிங்கம், 'பண்ணை நிர்வாகப் பயிற்சி' - டாக்டர் திருமதி எஸ். தனபாலசிங்கம் ஆகியோர் மேற்கண்ட விடயங்கள் பற்றி கருத்துரை வழங்குவார்கள் இதனை தொடர்ந்து குழுநிலை ஆய்வும் நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கருத்தரங்கு டாக்டர் எஸ் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் 'கால்நடை வளர்ப்பை விருத் செய்தல்'' என்னும் தலைப்பில் நடைபெறும்.

இங்கு 'கடந்த காலங்களில் கால் நடை வளர்ப்பைப் பாதித்த காரணங்கள்,' 'கால் நடைவளர்ப்பில் தற்போதைய செயற் திட்டங்கள்', 'எதிர் காலத்தில்கால் நடைவிருத்தி'' என்னும் விடயம் தொடர்பான கருத்தரங்கும் நடைபெற்று

இதனைத் தொடர்ந்து குழுநிலை ஆய்வும் இடம்பெறும். [ச]

## கரபந்தாட்டம்: இன்று நீர்வேலியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தினால், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் 'செற்அப்' கரபந்தாட்டப் போட்டி இன்று நீர்வேலி ஐக்கிய விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது மேற்படி போட்டி தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும் [வி]

மிது வீடியோ மூவிசாரின்
**நேற்றைய வெளியீடு**
பாரத், விஜி, அனுராதா, லூஸ்மோகன்
நடித்த
★ **படிக்காத பாடம்** ★
[தரமான பிரதி]
**மிது வீடியோ மூவிஸ்**
பிரதான வீதி,
**சித்தன்கேணி.**
(A 1471)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 17-10-86

வன்னிவிளாங்குளம்

# மினி இராணுவமுகாம் மீது மக்கள் விடுதலைப் படை தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

வன்னிவிளாங்குளம் பாடசாலை, கோயில், கோயில் மடம் ஆகியவற்றில் தற்காலிக முகாமிட்டிருந்து, அப்பகுதி மக்களின் பொருள்களைச் சூறையாடியும், பெண்களுடன் தகாத முறைகேடாகவும் நடக்கஆரம்பித்த இராணுவத்தினர் மீது கடந்த 13-ம் திகதி தமது மக்கள் விடுதலைப்படையினர் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து இராணுவம் அந்த முகாமில் இருந்து மீண்டும் மாங்குளம் முகாமுக்குச் சென்றுவிட்டதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து கடந்த 12ம் திகதி இரவு 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பல நவீன இராணுவ வாகனங்களுடன் வன்னிவிளாங்குளம் பாடசாலை, கோயில், கோயில்மடம் ஆகியவற்றில் தற்காலிக மினி முகாம் அமைத்து அந்த இடத்து மக்களின் பொருட்களை சூறையாடியும், பெண்களுடன் முறைகேடாகவும் நடக்க ஆரம்பித்தனர்,

இதையறிந்த மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் 13ம் திகதி இரவு 7-30 மணியளவில் மேற்படி மினிமுகாம் மீது தாக்குதல் நடாத்தஆரம்பித்தனர்

இத்தாக்குதலின்போது நவீன மோட்டார் ஷெல்கள், கலி 30 ரக துப்பாக்கிகள், பல நவீன தானியங்கித் துப்பாக்கிகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டன மிக உக்கிரமாக நடந்த இந்த மோதலின் பின் மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர் வன்னிவிளாங்குளம் மினி முகாமில் இருந்து மீண்டும் மாங்குளம் இராணுவ முகாம் திரும்பிச் சென்றனர். இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் சரியாகத் தெரியவில்லை இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்காம் என அஞ்சப்படுகின்றது

''இத் தாக்குதலின் போது இம் மண்ணின் மீட்புக்காக இறுதிவரை போராடிய மக்கள விடுதலைப் படையின் தோழர் நியூட்டன் (இ. அரசரத்தினம், தருமபுரம்) வீரமரணமடைந்தார். அவருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் மினி முகாம் அமைக்கப்பட்டதால் பதற்றம் அடைந்திருந்த அப்பிரதேச மக்கள் மீண்டும் வழமையான வழ்க்கைக்குத் திரும்பி உள்ளனர். இத்தாக்குதலின் பின்னர் மாங்குளம் தணுக்காய் வீதியிலுள்ள இரண்டு பாலங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் தகர்க்கப்பட்டுள்ளன'' இவ்வாறு அறிக்கை கூறுகிறது (மா

## நேற்று கோட்டையிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறை வீதியில் யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு மிக அண்மையில் 'புளொட்' இயக்கப் போராளிகளினால் அமைக்கப்பட்டுள்ள மணல்மூடை அரணைநோக்கி நேற்றுமாலை திடீரென கோட்டையிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்,

இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினால் நேற்று மாலை யாழ் நகரில் பதற்றம் நிலவியது யாழ். நகரில் கடமைகள் நிமித்தம் நின்ற மக்கள் பாதுகாப்பிடங்களை தேடி ஓடினார்கள். (ஒ-ச)

## நேற்றும் செயல்படவில்லை

யாழ்ப்பாணம், வெள்

யாழ. ஆஸ்பத்தரியில் நேற்றும் வெளிநோயாளர் பிரிவு இயங்கவில்லை. கிளினிக்குகளும் செயற்படவில்லை. அவசர சிகிச்சைப் பிரிவு மட்டும் செயல்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரி தற்போது செயற்படும் விதம்பற்றியும் தொடர்ந்து செயல்படுவது பற்றியும் ஆராய்வதற்காக இன்று காலை யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஊழியர்கள் கூட்டமொன்றினை நடாத்தியுள்ளனர். [ச]

## 'பிரபா'வை தீர்த்துக்கட்டும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் மேலும் தெரிவித்ததாவது:-

### காதல் பிரச்னையில் வெளியேறினேன்

''85ம் ஆண்டு முற்பகுதியில் அரியாலையில் உள்ள எனது வீட்டில் பெற்றோருக்கும் எனக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தைத் தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறினேன்.

நான் ஒரு பெண்ணை விரும்பிக் காதலித்ததைத் தொடர்ந்தே பிரச்னை ஏற்பட்டது.

மனம் குழம்பிய நிலையில் நேராக யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குச் சென்று சரணடைந்து எனது நிலைமையை எடுத்துச் சொன்னேன்.

எனது பிரச்னையைக் கேட்டறிந்த மேஜர் தென்னக்கோன், எனக்குப் புகலிடம் அளித்தார்.

கைதிகளை அடைத்து வைத்திருக்கும் சிறைச்சாலைக்குள் எனக்கு ஒரு அறை தரப்பட்டது.

சுமார் 250 போராளிகளின் புகைப் படங்களைக் கொண்ட 'அல்பம்' ஒன்றை என்னிடம் காட்டி அதிலுள்ளவர்களின் விபரங்களைக் கேட்டனர்

அந்தப்படவரிசையில் கிட்டு, திலீபன், ஜொனி, வாசு, பிறேம், விஜேத் ஆகியோரின் படங்களை எனக்குத் தெரியும் என்று காட்டினேன்.

15 நாட்களுக்குப் பின்னர் அவர்கள் தங்கியுள்ள முகாம்களைத் தெரியுமா? என்று கேட்டதுடன் அவற்றைக் காட்டுமாறு வற்புறுத்தினார்.

### 21 ஆயிரம் சன்மானம்

அவர்கள் காட்டிய வரைபடம் ஒன்றில் அரியாலையில் இருந்த புலிகள் முகாமை அடையாளம் காட்டினேன். ஒருமாதத்திற்குப் பின்னர் அரியாலை முகாம்தாக்கப்பட்டது இதற்கு வெகுமதியாக 21-ஆயிரம் ரூபா எனக்குத் தரப்பட்டது

விடுதலை இயக்கங்களுக்குப் பொது மக்கள் அளிக்கும ஆதரவு; போராளிகள்வசமிருக்கும் ஆயுதங்கள் பற்றிக் கேட்டார்கள்.

பொதுமக்கள் விடுதலை இயக்கங்களுக்குப் பேராதரவு வழங்குவதாகக் கூறிய போது அவர்கள் 'உண்மையாகவா என்று கேட்டு அதிசயமடைந்தார்கள்.

கிட்டுமாமவைப் பற்றிக் கேட்டபோது அவர் லான்சர்களில் செல்வதைக் கண்டிருப்பதாகக் கூறினேன். அத்துடன் நீங்கள் முகாமைவிட்டு வெளிக்கிடுவதில்லையே உங்களுக்கு ஏன் இந்த விபரங்கள் என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

இணைப்பதிகாரி பிரிகேடியர் யரி ரூடசிங்கா கோட்டை முகாம் வந்த போது மேஜர் தென்னக்கோன் அறிமுகம் செய்து வைத்தார். 6-7 தடவை திரு ரூ சிங்காவைச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது சில மாதங்களுக்குப் பின் விடுவிக்கப்பட்டேன.

வெகுமதியாகக் கிடைத்த 21 ஆயிரம் ரூபாவில் 10 ஆயிரம் ரூபாவை எனது தந்தையார் வாங்கிவிட்டார் அப்பணத்தைக் கொண்டு கொழும்புக்குச் சென்ற எனது தந்தையார் சூதாட்டத்தில் செலவளித்து விட்டார். நானும் அவருடன் சென்று வருவது வழக்கம்.

எனது தந்தையார் இறந்த பின்னர் நான் கொழும்பு செல்வதற்கு பெரமிட் எடுக்க பலாலி சென்று வருவது வழக்கம்.

### பிரபாவை தீர்த்துக்கட்ட

ஒரு சமயம் நான் பலாலி முகாமுக்கு சென்றபோது விசேட விமானம் ஒழுங்கு செய்து தருவதாகவும் இந்தியாவுக்கு சென்று பிரபாகரனை ஒழித்துக் கட்டினால் விலை மதிக்க முடியாத வெகுமானம் தருவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர் அவரை எனக்குத் தெரியாதென்று மறுத்து விட்டேன்.

### கிட்டுவை ஒழிக்கத் திட்டம்

இதன் பின்னர் கிட்டுமாமாவை ஒழித்துக் கட்டினால் ஒரு லட்சம தருவதாகச் சொல்லி என்னிடம் ஒரு கிரனேட் தந்தார்கள், புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரைக் கொன்றால் 25 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்குவதாகவும் சொன்னார்கள்.

இராணுவத்தினர் தந்த கிரனேட்டுடன பல தடவை யாழ் நகரில் நடமாடியும் அதனை உபயோகிக்கவில்லை என்றார்

அக் கிரனேட்டை பத்திரிகையாளருக்குக் காட்டினார். அது பாகிஸ்தான் தயாரிப்பாகும் [எச் ஈ. 36 எம். கே. 1] அதன் கிளிப்பை அகற்றி எறிந்தால் 6 செக்கன்டில் வெடிக்கும் ஆனால் 3 செக்கண்ட் வைத்திருந்து விட்டுத்தான் எறிய வேண்டும் என்றார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது -

மீண்டும் சில நாட்களுக்குப் பினனர் பலாலி முகாம் சென்றபோது கிரனேட் பற்றிக் கேட்டார்கள்

''புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த டானியல் என்பவருக்கு எறிந்தபோது அது வெடிக்கவில்லை. பயத்தினால் அதனை நான் மீண்டும் எடுக்கவில்லை'' என்று பொய் சொன்னேன்.

உம்மைப்போல பல தமிழர்களிடம் நாங்கள் 'சயனைட்' வில்லைகளைக் கொடுத்துள்ளோம். போராளிகள் அருந்தும் பானங்களில் கலந்து அவர்களை கொல்லும்படி... என்று எனக்கு அறிவுறுத்தினார்கள். நான் பின்னர் வருவதாகச் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்

நான் மறைத்துவைத்திருந்த கிரனேட்டைக் கண்ட எனது வீட்டுக்காரர் இதை யார் உமக்குத்தந்தது என்றுகேட்ட போது புளொட்இயக்கம் தந்ததென்று சொன்னேன்.

போராளிகள் பற்றிய தகவல்களை யாழ். பல்கலைக்கழகத்தில் பௌதிகவிஞ்ஞானப் பட்டப்படிப்புபடிக்குமமாணவர் ஒருவரிடமிருந்து பெற்று வந்தேன்.

யாழ். மத்திய கல்லூரியில் படித்து க பொ. த- பரீட்சையில் சித்தியடைந்த நான், யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்ப பொறியியல் விஞ்ஞானம் கற்றுவிட்டு பின்னர் வியாபாரத்திலீடுபட்டுவந்தேன்.

பொதுமக்கள் கூடிக்கதைக்குமிடங்களிலும், கூட்டங்களிலும், சந்திகளிலும் போராளிகள் பற்றிய தகவல்களை சேகரித்து வந்தேன். (மா)

## இன்று எழுத்தாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க எழுத்தாளர் மகாநாடு இன்று காலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியா ''நந்தி'' தலைமையில் நடைபெறவுள்ளது

திரு வரதர் மங்கல விளக்கேற்ற யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மகாநாட்டைத்துவக்கி வைக்க நூல் கண்காட்சியை யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ வீ கே. சிவஞானம் திறந்து வைக்கவுள்ளார் (வா)

## மன்னார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பில் ஒருவர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நேற்றுமுன்தினம் காலை தள்ளாடி இராணுவமுகாமிலிருந்து 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் புறப்பட்டு நடந்து சின்னபன்றிவிரிச்சான் ஊடாக ரோந்து சென்று கொண்டிருந்த சமயம். விடுதலைப்புலிகள் இடைமறித்து நேரடி தாக்குதல் நடாத்தியதில் இராணுவத்தினர் நிலைகுலைந்து தயக்கேற்பட்ட இழப்புகளுடன் உடனடியாக பின்வாங்கி முகாமை அடைந்தனர். இத்தாக்குதலின்போது எமது தரப்பில் நாயுடு (மன்னார்) வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்''. [மா]

## மரண அறிவித்தல்

### திருமதி பேள். றெயீனா. அகஸ்தீன் (சரஸ்)

7. விதானை லேன் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் திருமதி பேள் றெஜீனா. அகஸ்தீன் (சரஸ்) 15.10 86 அன்று யேசுவினடி சேர்ந்தார். இவர் திரு V. S S அகஸ்தீன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரனி அகஸ்தீன் திருமதி சுகிர்தராணி பஸ்தியாம்பிள்ளை, றெஜி சனியூட் அருள்நேசன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி ராசம்மா பஸ்தியாம்பிள்ளையின் அன்பு மகளும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மரணச் சடங்கின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (C 5239)

### திரு. எலியா மரியான் யேம்ஸ்

சுன்னாகத்தைச் சேர்ந்த திரு எலியா மரியான் யேம்ஸ் ஓய்வுபெற்ற ஆசிரியர் (அவிசாவெல புனித மரியாள் கல்லூரி, யாழ் நாவாந்துறை புனித நீக்கிலஸ் பாடசாலை), 14-10-86 அன்று இறைவனடி சேர்ந்தார். பிலிப்பாவின் அன்புக் கணவரும், றெயீனா, யூட் மரியரட்ணம் ஆசிரியர், றெங்கல்லி ஆசிரியை, லூசியன், பாக்கியநாதன், திரேசா, மரியடவளம், மரியமங்களம், மரியநாதர் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். யாழ் நவாலி அ மி த க. பாடசாலை அதிபர் இ.எம்.யோசப் அவர்களின் அன்புச் சகோதரரும் திரு அ டேவிட் ஆசிரியர் அவர்களின் மைத்துனரும், ஆசீர்வாதம், அப்புறூஸ் அவர்களின் சகலனுமாவார் அன்னாரின் பூதவுடல் 18-10-86 [நாளை] சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். தகவல் மனைவி, மக்கள். (C 5248)

### திரு. I. செபஸ்ரியாம்பிள்ளை

இளவாலை இளைப்பாறிய ஆசிரியர் செபஸ்ரியாம்பிள்ளை காலமானார். இவா அன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி வில்பிரட் (சிங்கப்பூர்) பிரான்சீஸ் (U K), யோகேஸ்வரி லேறன்ஸ், சமரக்கோண் (U.K]. மாப்பாணசிங்கம் (U K, புவனேஸ்வரி விக்டர்(பிரான்ஸ்] ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற A சூசைப்பிள்ளை (சிங்கப்பூர்) காலஞ் சென்ற மரியப்பிள்ளை [சிங்கப்பூர்], காலஞ் சென்ற கொலஸ்ரிக்கா, ச. அன்னம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார் ஈமக்கிரியை நாளை 18-10-86 சனிக்கிழமை காலை 9 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து இளவாலைச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. லோறன்ஸ், அகத்தர் ஒழுங்கை, இளவாலை.

(C 5236)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126